உ

தேவிசகாயம்.

ANUBOGAVYTHIA

BRAMAH RAHASIAM

அநுபோகவயித்திய

பிரம்மரகசியம்.

நான்காம்பாகம்.

இஃது,

ஜெகந்நாதஸ்தலம்

கோஷாயிசுவாமிகள்

அனுக்கிரகத்தின்படி

சிறுமணவூர்

~~முனிசாமி முதலியாரால்~~

எழுதி முடிவுபெற்று,

பூவிருந்தவல்லி,

சுந்தரமுதலியார் குமாரர்

பூ. சு. குப்புசாமி முதலியாரது

ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை-புரசை.

1913

Registered Copy right.

உ

கடவுள்துணை.

முகவுரை.

இந்த அனுபோகவயித்திய பிரம்மரகசியமென்னும் நூலானது வெளிவந்த காரணமும், இதனுள் அடங்கிய விஷயங்களுக்கும், இங்ஙனம் முகவுரையெனப் பெயர்வகித்து சுருக்கமாக வெழுதி முடிக்கப்பட்டிருக்கிறது.

ஜெகந்நாதஸ்தலம் ஸ்ரீமான் கோஷாயி சுவாமிகளால் நெடுவருடங்களாக காசிமுதலான திவ்யக்ஷேத்திர யாத்திரைவாசிகளுக்கு தருமத்திற்கு உபயோகித்துவந்த சத்தியமான உத்தமமுறைகள்யாவும் இன்னும் சில கைமுறைகளையும் சேர்த்து இன்னூலுக்கு போதுமான பொருளைச் சிலவிட்டு அச்சிடுவித்தவராகிய ம-௱-௱-ஸ்ரீ, பூ. சு. குப்புசாமி முதலியார், அனுமதியின்றி இன்னூலை பிறர் யெவ்விதத்தும் அச்சிடாதபடிக்கு (கெவர்மென்ட்டு சட்டப்படி) (REGISTERED COPY RIGHT) செய்திருக்கிறது.

{ அனுபோகவயித்திய பிரம்மரகசியம் - 8 - காண்டமும் தயாராயிருக்கிறது. }

காண்டம் 1-க்கு விலை அணா	0	8	0
ஷை 4-காண்டமும் ஓரேகட்டடம்	1	8	0
ஷை 8-காண்டமும் ஓரேகட்டடம்	3	0	0

வி. பி. போஸ்ட்சார்ஜி பிரத்தியேகம்.

10-புத்தகம் மொத்தமாய் வாங்கினால் 1-புத்தகம் கமிஷன்கொடுக்கப்படும்.

ரிப்ளேகார்ட்யெழுதினால் பதில்சங்கதிகிடைக்கும்.

☞ அநேகமான தமிழ்புத்தகங்களும், மருந்து வகைகளுமுண்டு விபரம்வேணுமானால், உ-அணா லேபில் அனுப்பி தங்கள் அட்ரஸ் எழுதியனுப்பினால் 1-கேட்லாக் புத்தகமனுப்பப்படும்.

பூ. சு. குப்புசாமி முதலியார், ஸ்ரீசுந்தரவிலாசம் பிரஸ்,
பிரம்பூர் பாரக்ஸ் போஸ்ட், மதராஸ்.

ஔவைக்குறள்

மூலமும் - உரையும்.

இதனால் சகலமான கல்விமான்களுக்கும் ஏனையோர்க்குந் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், அநேகவருஷங்களுக்கு முன்னிருந்த கடைச்சங்கத்தார் காலத்திலிருந்த (ஔவையார் என்னும்) மகாமகிமைபொருந்திப் நம்பாட்டியாரானவர். அனேகநீதிசாஸ்திரங்கள் திருவாய்மலர்ந்து உலகத்திலுள்ள ஜனங்களுக்கு அறிவுபுகட்டியிருக்கின்றனர் என்பது யாவர்க்குந் தெரிந்தவிஷயம் அவ்விதம் செய்யப்பட்ட பலநீதிநூற்களில் அவரால் செய்யப்பட்ட (ஔவைக் குறள்) என்னும் நூலும் ஒன்றாகும் அது அனேகவகையான நீதிகளும், தெய்வபக்தி, யோகம், ஞானம், இவைகளை யுள்ளடங்கிய அறம், பொருள், இன்பம், வீடு, என்னும் நாற்பொருளையும் சொல்லுகின்றது அந்தநூல் இரண்டடி கொண்ட குறள் ரூபமாக விருப்பதால் அனேகருக்குப் பொருள்விளங்காமைபற்றி அதற்குத் தக்கமாதிரி பதவுரை, விசேஷவுரை, கருத்துரை, இவைகள் எழுதி நல்லகிளேஸ்காகிதத்தில் அச்சிட்டிருக்கிறோம்.

இதன் விலை அணா	0	8	0
ஷை மூலம் கிளேஸ் விலை	0	2	0

நூலின் உட்பிரிவு.

1.	வியாதிகளின்காலபரணி.	9
2.	வியாதிகளின்வாலாற்றுப்பரணி.	15
3.	இங்கிலீஷ்வகைபரணி.	21
4.	பெருமருந்துவகைபரணி.	29
5.	மாத்திரைவகைபரணி.	44
6.	எண்ணெய்வகைபரணி.	53
7.	தைலவகைபரணி.	61
8.	கியாழவகைபரணி.	77
9.	கண்டாவிழ்தவகைபரணி.	84

உ

தேவிசகாயம்.

அவுஷதங்களின் அட்டவணை

அவுஷதங்கள்.	பக்கம்	அவுஷதங்கள்.	பக்கம்.
விநாயகர் துதி	9	பித்தபீனிசம்	19
இன்ன நட்சத்திரத்தில் சுரம்கண்டால் இத்தனை நாளில் தீரும்	0	சிலேத்துமபீனிசம்	0
		நீர்பீனிசம்	0
		சீழ்பீனிசம்	0
ரேவதிநாட்சுரம்	11	உதிரபீனிசம்	0
ஆகாத்திதிகள் அறிக	12	நவமூலம்	0
பண்க்கட்டளை	0	காமாலை	20
சீடற்கறிவு	13	சோகை	0
நூலின்பயன்	14	அதிசாரம்	0
வியாதிகளின் வரலாற்றுப்பரணி		பித்தஅதிசாரம்	0
நேத்திரரோகம்	15	சிலேத்தும அதிசாரம்	0
ஆநந்தவாய்வு	0	சுர அதிசாரம்	0
வாய்வுகள்	0	அசாத்திய அதிசாரம்	0
பித்தவியாதி	0	இங்கிலீஷ்வகைப்பரணி.	
குன்மவியாதி	16	அஜீரணத்திற்கு	21
பித்தபயித்தியம்	0	கீல்வாய்வுபிடிப்பு	0
பாண்டுநோய்	0	வாதயிடுப்புவலி	22
பிள்ளைக்கண்டமாலை	0	தொண்டைநோய்	0
குடைச்சல்கள்	17	சுவாசக்குழாய்தாபனம்	0
குட்டங்கள்	0	தலைவலி, ஒருதலைவலி	0
சுரரோகம்	0	ஈளைப்பிணிச்சிகிக்கிர	23
கண்டமாலை	18	பல்லுநோய்	0
மகோதரம்	0	வயற்றுப்பிடிப்பு	0
பெருவயறு	0	இசிவு	0
நீராம்பல்	0	தேள்குளவி	0
பிரநீர்க்கோர்வை	0	பித்தத்திற்கு	24
நீராமை	0	நீர்ஒழுக்கிற்கு	0
பீலிகை	0	வயற்றுகிருமிகட்கு	0
பீனிசம்	0	ஒருதலைநோய்	0
வாதபீனிசம்	19	சீதளஜலுப்பு	0

அவுஷதங்கள்.	பக்கம்
வாய்வுகளுக்கு	24
வெள்ளைக்கு	25
சூதகவாய்வுக்கு	0
கொருக்கிற்கு	0
கண்ணோய்க்கு	0
சுரங்களுக்கு	26
மூரைகாச்சலுக்கு	0
இருமலுக்கு	0
வயற்றுவலிக்கு	0
விரைநோய்க்கு	27
குடைச்சலுக்கு	0
பக்கயிழுப்புக்கு	0
அதிசாரபேதிக்கு	0
எரிவுக்கு	28
அஜீரணபேதிக்கு	0
மாரில்கபமில்லாத	0
பெருமருந்துபரணி	
இராமபாணயிடிமருந்து	29
சரமாரித்தயிலம்	3)
திரும்வியாதிகள்	31
ரசகெந்திமெழுகு	33
திரும்வியாதிகள்	34
விஷமுஷ்டித்தயிலம்	36
சோதிரிஷத்தயிலம்	38
லகுயிடிவல்லாதி	41
சித்திரபல்லாதி	42
மாத்திரைவகைபரணி.	
பாலசஞ்சீவிக்குளிகை	44
பாலபேதிக்குளிகை	0
மகாசுராங்குசக்குளிகை	45
சூலைகுடாரம்	0
சுரநாதக்குளிகை	46
சீதசுரக்குளிகை	0
வாலசஞ்சீவி	0
பாலவிரோசனக்குளிகை	47

அவுஷதங்கள்.	பக்கம்.
சர்வமாந்தக்குளிகை	47
சஞ்சீவிக்குளிகை	0
கபாடமாத்திரை	48
குழந்தைகள்சுரமாத்திரை	0
சிகப்புமாத்திரை	0
அமுர்தசஞ்சீவி	49
லட்சுமீநாராயணக்குளிகை	0
கஸ்தூரிமாத்திரை	0
குங்குமப்பூமாத்திரை	0
கோடாசுழிக்குளிகை	50
பூரமாத்திரை	52
மதுரமாத்திரை	0
சுரயேலாதிக்குளிகை	0
எண்ணெய்வகைபரணி.	
பொதுஎண்ணை	53
கதிர்எண்ணை	54
சூரியபுடஎண்ணை	0
மண்டைகுடைச்சலுக்கு	55
கெணத்தெண்ணை	0
பாலசஞ்சீவிஎண்ணை	56
இரத்தகணத்திற்கெண்ணை	57
கம்பீரத்தெண்ணை	0
மேகசூட்டிற்குஎண்ணை	58
காதுநோய்க்குஎண்ணை	0
குளுமைஎண்ணை	59
சிரங்குக்கு	0
ரிணங்களுக்கு	0
லிங்கஎண்ணை	6)
கடுகுஎண்ணை	0
தயிலவகைபரணி.	
சங்கம்வேர்தயிலம்	61
இருவேலித்தயிலம்	0
அருகன்வேர்தயிலம்	0
கொட்டைப்பழத்தயிலம்	62
கரிசாலைத்தயிலம்	(

அவுஷதங்கள்.	பக்கம்.	அவுஷதங்கள்.	பக்கம்.
இலுப்பைபட்டைதயிலம்	62	கெணமாந்தவாந்திக்கி	75
கெற்பத்தயிலம்	0	அள்ளுமாந்தத்திற்குகியாழ	0
மேகத்தயிலம்	63	மாந்தத்திற்குகியாழம்	76
வில்வாதித்தயிலம்	0	சர்வமாந்தக்கியாழம்	0
வெட்டிவேர்தயிலம்	0	மாந்தஉப்பிஷத்திற்கு	77
கொடிவேலித்தயிலம்	0	ஐந்துவிதமாந்தத்திற்கு	0
சீரகத்தயிலம்	64	பித்தத்திற்கு	0
கீழ்க்காய்நெல்லித்தயிலம்	0	அஜீரணகிராணிக்கு	78
சவுரித்தயிலம்	0	குன்மவயற்றுவலி	0
மேருவின்தைலம்	65	அண்டநோய்க்கு	0
ஜன்னிக்குமேற்பூசுந்தயிலம்	0	ஜெலக்கட்டுக்கு	0
தும்பைத்தயிலம்	66	ஜன்னிதோஷத்திற்கு	79
செம்பைத்தயிலம்	0	சேத்துமசுரக்கியாழம்	0
அழிஞ்சித்தயிலம்	67	சேத்துமசுரகுணம்	0
தீபாக்கினித்தயிலம்	0	பலவிதசுரக்கியாழம்	80
கியாழவகைபரணி.		பலசுரக்கியாழம்	81
		வாதசுரக்கியாழம்	82
சந்தணக்கியாழம்	68	பயித்தியசுரக்கியாழம்	0
சிருகாஞ்சொறிகியாழம்	0	சிலேத்துமசுரக்கியாழம்	83
வெட்பாலைகியாழம்	0	**கண்டாவிழ்தபரணி**	
வில்வக்கியாழம்	69		
கோரைக்கிழங்குகியாழம்	0	பஞ்சபாக்கியசூரணம்	84
நெல்லிக்காய்கியாழம்	70	மூலவாய்வுக்கு	0
இலவம்பட்டைகியாழம்	0	சகலகிராணிக்கும்	0
இரத்தபேதிக்குகியாழம்	0	மூலமுளை	0
வாதசுரக்கியாழம்	0	சீழ்மூலத்திற்கு	85
பித்தசுரக்கியாழம்	71	கண்ணில்சதைவளர்த்திக்கு	0
சேத்துமசுரக்கியாழம்	0	வைசூரியால்தாகம்	0
மாந்தகியாழம்	0	வைசூரியினால்நேத்திர	0
அதிசாரதாபசுரக்கியாழம்	72	கண்ணில்வைசூரிவராதி	0
குழந்தைகள்மாந்தகியாழம்	0	வைசூரிசூலைக்கி	0
முறைவாதசுரக்கியாழம்	73	ஆராதபுண்ணுக்கு	0
தனிவாதசுரக்கியாழம்	0	வயற்றுகிருமிவிழ	86
முறைபித்தசுரக்கியாழம்	0	பொருமல்வாதத்திற்கு	0
முறைபித்தவாதசுரக்கியா	74	சாம்பல்தின்னும்குழந்தை	0
விடாதசுரக்கியாழம்	0	வெட்டுகாயத்திற்கு	0
மாந்தவிக்கம்	0	வங்குகருஞ்சிட்டைக்கு	0

அவுஷதங்கள்.	பக்கம்.	அவுஷதங்கள்.	பக்கம்.
மார்புசளிகோழை	86	அரணைவிரியன்கடிக்கு	0
கண்ணோய்க்கு	0	சுரட்டைகடிக்கு	0
உரம்விழுந்தால்	0	தந்தரோகத்திற்கு	88
பாம்புகடித்தால்	87	காதில்சீழ்வடிதலுக்கு	0
தேள்-நட்டுவக்காலி	0	பாஷாணந்தின்றவர்க்கு	0
தக்கிருமலுக்கு	0	அறையாப்புக்கு	0
வேக்குருக்கு	0	எச்சிற்றழும்புக்கு	0

அவுஷிதங்களின் அட்டவணை.

முற்றுப்பெற்றது.

இனி ஐந்தாம்பாகத்தில் வியாதிகட்கு

நேர்த்தியான கியாழவகைகள்

சொல்லப்படும்.

உ

தேவிசகாயம்

ORIENTAL MANUSCRIPTS LIBRARY
MAY 1918

அனுபோகவயித்திய

பிரம்மரகசியம்.

நான்காவதுகாண்டம்.

முதலாவது

வியாதிகளின் காலபரணி.

விநாயகர் துதி.

வெண்பா.

ஓதவினையகலு மோங்குபுகழ்பெருகும்
காதற்பொருளனைத்துங் கைகூடும்—சீதப்
பணிக்கோட்டுமால்வரைமேல் பாரதப்போர்தீட்டும்
தனிக்கோட்டு வாரணத்தின் றாள்.

நான்முகம்.

27 - நட்சத்திரங்களில் இன்ன நட்சத்திரத்தில் சுரம் கண்டால் யித்தனைநாளில் தீருமென்றறிக

பரிமருத்துநாளில் தோன்றுங்காச்சல்
பார்த்தரிகயீராறு நாளிற்றீரும்
விரிகதிரோன்பிரந்தநாள் துடர்ந்தகாச்சல்
மீளாதுபனிரெண்டு நாளில்மெய்யா
எரிபிரந்தகார்த்திகைக்கு விடுமெட்டாநாள்
இலக்கமறமீரிநின்றால் யிருபத்தொன்றில்

பரவுவெப்புவிட்டகலும் நவ்விநாளில்
பற்றுசுரம்விட்டகலுந் தொட்டநாளே. (1)

தொட்டரியரோகணியிற் பற்றிவந்த
சுரங்களதுபத்தானுட் டோகைநல்லாய்
கெட்டதிருவாதிரையில் சுரங்கள்கொல்லும்
கேட்கவொண்ணுபொல்லாத கிலேசனுளாம்
மட்டுநறும்புனர்பூச மீரெட்டானுல்
வந்தசுரம்பூரமிரண் டாறுநாளில்
திட்டமுரவிட்டுவிடும் சொன்னேன்சொன்னேன்
தீராதாயிலியமீ ரைந்திற்சாவே. (2)

ஈரைந்தில்ஆயிலியங் கொல்லாதாகில்
இருபத்திநாலானுள் சாந்தமாகும்
நேரைந்துமகத்துசுர மீரார்நாளில்
நிக்கிரகம்செய்யாமல் நிற்குமாகிற்
ருர்துஞ்சமூவைந்தா னுளில்வெப்பு
தான்றணியுமென்றுநூலோர் தானேசொன்னுர்
சீரஞ்சாப்பூரத்திற் பிறந்தவெப்பு
செலுத்துபத்துவிருபத்தி ரெண்டிற்றீரும். (3)

உத்திரத்தில்பற்றுசுரம் பத்தானுளில்
உருக்கிவிடும்மேல்நின்று லுரைக்கக்கேளு
இத்தரையிலிருபத்தி ரெண்டானுளி
லிட்டுருபடக்கொன்றுவிடு மின்னங்கேளே
அந்தசுரம்யெட்டானுள் விட்டுப்போகும்
அடுத்தசித்திரையதுதா னதுவுமெட்டே
பத்திவிடுமேல்நின்று லுரைக்கக்கேளு
பரிந்துவிடும்பயிற்றிரண்டு நாளில்மீளும். (4)

கேளுரைக்கசோதிசுரம் நாலாநாளிற்
கிலேசமறுதேயிருந்தாற் பதினுலாநாள்
மீளாமல்மேல்நின்றுல் பயிற்றுநான்கு
மிக்கநாள்தனிலகலும் விசாகவெப்பு

தோள்ளசைபடுமிருபத் தொன்றிற்கொல்லும்
 தொடரனுட்மெட்டானுள் தொடங்கிமீண்டால்
மீளாதுபனிரெண்டா நாளிற்றீரும்
 முன்கோட்டையீராரில் முடிகித்தீரும். (5)

முடுக்கவருமூலவெப்பு பத்தானுளில்
 மூண்டுபின்புந்தணியாமல் மீறிநின்றால்
கடுகவெப்புநாலைந்து நாளிற்றீரும்
 காணறியபூராட மொன்பதானுட்
படுகளமாய்கொன்றுவிடு முத்திருடம்
 பாதகஞ்சேரெட்டானுள் பதினுலாநாள்
குடிகெடுத்தேவதைத்துவிடுந் திருவோணத்தில்
 கொண்டவெப்புநாலெட்டில் குணமாந்தானே. (6)

குணமாகும்அவிட்டமீ ரைந்துநாளில்
 கொள்சதையமாறுநாள் குணமாம்வெப்பு
அணுகாமல்மேனின்றால் பனிரெண்டாநாள்
 அச்சமிகும்ஆயிழையே யறையக்கேளாய்
பிணியுருக்கும்பொல்லாத பூரட்டாதி
 பிலத்தனுளொன்பதனில் பிடித்துக்கொல்லும்
தணிவுகின்றவுத்திரட் டாதிநாளில்
 றரித்தவெப்புபன்னிரெண்டிற் சாந்தமாமே. (7)

வேறு.

ரேவதிநாள்சுரம்.

சாந்தமாம்பதினுலாநாள் தணிந்திடாதிருந்ததாகில்
சேர்ந்தநாளெட்டில்வைப்பு தீர்ந்திடுந்திண்ணமாக
சூழ்ந்தநாளிருபத்தேழும் துகளறத்தெரிந்துகொண்டு
யோந்தவாரமிந்துமிக்கப் புகழ்பெரமருந்துசெய்யே.

புடம்வைத்தபுண்கள் அல்லது கட்டிகளை அறுக்க

ஆகாத்திதிகள் அறிக

அகஸ்தியர் வாக்கியம்.

சீர்பெரும்பிரதமை சேரும்பெருவிரல்
  நேர்பெருயுள்ளங் காலது துதிகை
திருதிகைமுழங்கால் சேர்த்திடுமென்க
  சவுத்திப்பெருந்துடை தாவிபசப்தமி
குய்யத்திடத்தே குடியிருந்திடுமாம்
  அய்யமேசஷ்டி யமர்ந்திடும்நாபி
சப்தமிமுலையில் தானிருந்திடுமே
  யொத்திடும்அஷ்டமி யோகினேம்கரத்தில்
மெத்திடுநவமி மேவியகழுத்தில்
  அதரந்தசமியி லாகுமவ்விடத்தே
ஏகாதசியில் யிருந்திடும்நாவில்
  துவாதசியில் துயின்றிடுநெற்றி
திரயோதசியில் சேர்ந்திடும்புருவம்
  சதுர்த்தசிபிடரி தானிருந்திடுமே
உதித்திடும்பூரணம் உச்சியிலுறையும்
  செப்பியவமிர்தம் நிலைநின்றதனுல்
சத்திரம்பண்ணில் தானெழும்நோய்கள்
  கொப்பளித்திடினும் குத்துப்பிடினும்
தப்பிலாஅரவம் தான்கடித்திடினும்
  அட்டைகடிக்கினும் அடிதடிச்சிலந்தியும்
வயத்தில்பிணியெனும் மரணமதாகுமே
  காசினிதனிலே கைவிஷதாரி
திதிகளையறிந்து செய்திடப்பலிக்கும்
  மலைதிகழ்முனிவர் மகிழ்ந்துரைத்தனரே.

தன்மந்திரிபகவான் அருளிய
பணக்கட்டவிா.

கேளப்பாதோஷத்துக் கிரஞ்சுபத்து
கெணிதமாய்சுரத்துக் கிரஞ்சுபத்து
வாளப்பாக்ஷயமுதலாய்நீரிழிவுகாசம்
வரிசையாய்மூணுபத்தி பணமேகேளு
நாளப்பாமருந்திட்டு முக்கால்வாங்கு
நலமில்லாபிளவைபவுத் திரமாங்குட்டம்
சூளப்பாயிரஞ்சு பொன்னேவாங்கு
துடியானதாதுநஷ்ட மிரஞ்சுவாங்கே. (1)

வாங்குவாய்மேகமென்றே சூலைக்கெல்லாம்
வரிசையாபஞ்சபணங் கூட்டிவாங்கு
நீங்கிடவேபணமிருபத் தஞ்சுகேளு
நிலையில்லாசத்திகுன்மம் வயற்றுக்கெல்லாம்
தாங்கிட்டமகோதரமும் ரெத்தபித்தம்
தந்தத்தில்புத்துமுதல் கெற்பரோகம்
பாங்குபெறபதினைந்து பொற்பணங்கேள்
பழுதுசொன்னலவுழ்தப்பை கட்டிப்போடே. (2)

போடப்பாயிந்தமுறை நீபொருளேதந்தால்
போய்மருந்துஅவுழ்தத்தை கொடுத்துந்தீரு
கோடப்பாகோடியென்ற ரோகமெல்லாம்
குறிப்பாகபாடுதற்கு யென்னலாகா
தேடப்பாகிடைக்காது வயித்தியத்திற்கு
சிறப்பளித்தமட்டுமடா ரோகந்தீரும்
நாடப்பாநிதியாசை பிரியாதார்க்கும்
நாவினல்தருமவிலை நவின்றிட்டேனே. (3)

சீடற்கரிவு.

பாரடாநூலீய்ந்தோர் மனநோச்செய்தால்
பரிவானவல்வினைகள் வந்துசூழும்

வாரடாபொருளீய்ந்து நூலைப்பாறு
வளமானபொருளுனக்கு யில்லாவிட்டால்
காரடாபணிவிடைகள் செய்துக்கேளு
கனமாகஅவர்கையால் கொடுக்கவாங்கு
நாரடாபதைப்பாய்நீ திருடினுக்கால்
நலமானசாபங்கள் வருகும்பாரே. (4)

நூலின்பயன்.

ஏட்டிலுள்ள நூல்களெல்லாம் செவிக்கேயின்பம்
இன்பரசவஸ்துவெல்லாம் நாவுக்கின்பம்
ஊட்டுகின்றபொசிப்பெல்லா முடலுக்கின்பம்
உறங்குகின்றசூட்சமெல்லாம் உயிருக்கின்பம்
நாட்டிலுள்ள அலங்கிருதம் கண்ணுக்கின்பம்
நன்மலரின்பரிமளங்கள் நாசிக்கின்பம்
ஆட்டிவிக்குஞ்சித்தருட பொருளைக்காட்டி
அரிவிக்கும்குருமுருகா யரிந்துகொள்ளே. (5)

காலபரணி-முற்றிற்று.

இனி வியாதிகளின் வரலாற்றுப்பரணி

கூறப்படும்.

௨'௫ ||-

உ

தேவிசகாயம்.

இரண்டாவது
வியாதிகளின்
வரலாற்றுப் பரணி.

நேத்திரரோகம்—மாதர்களை யுற்றுப்பார்த்து மோகித்தல்துயில்நீங்கும் பெண்களின்மேல் பயில்விழி நாட்டல் மாதர்குளிக்கும் நீர்க்கறையினின்று நீங்காதுருத்தல், உயிர்வதை செய்தலைக் கண்ணுற்றும்விலக்காதிருத்தல்,பசுக்களின்பால்கரக்கையில் விழிநோக்கிபிரம்மித்தல்,இத்தகைபோன்ற யின்னும் பலவித குற்றங்களால் கண்ணோய்கள் (96) விதங்களாய்ச் சம்பவிக்குமென்றறிக.

ஆநந்தவாய்வு—உயிர்ப் பிராணிகளை கட்டியும் தூக்கி ஊஞ்சலாடவிட்டும் அறுத்தல், பசுவையடித்தல்,பலஜீவராசியில் வயற்றைக்கீரி குடல்வெளிவரக்காணல், இவைகளால் வாதரோகம் (84) ல் ஆனந்த வாய்வென்னும் ரோகம் சம்பவிக்குமென்றறிக.

வாய்வுகள்—சிசுக்களை திடுக்கிடவடித்தல்,உதைத்தல் ஜீவஜெந்துக்களை காலால்மிதித்தும் கையால் முரித்தல், வருமையுற்ற முதியோர்களுக்குக் காலினால் யேவலிடுதல், இவைகளால்வாதசம்மந்தவியாதிகள் அணுகுமென்றறிக.

பித்தவியாதிகள்—கடன்வாங்கிக் கொடாமையாலும்பெரியோரை மனம்நோகப் பேசியேசுவதாலும் தாக பானம் உதவாததாலும் பித்தட்சயம் பித்தகாசம்

மந்தாரகாசம் ரத்தகாசம் சுவாசகாச மிவைகள் உண்டாகும், அன்றியும் பெலிகடியாலும் மூலத்தில் அனல்அதிகரித்து மூளையில் நீர்கசிந்து நெஞ்சில்சுவாசம் சுவரி கபத்தை உரையச் செய்துவிடும் யென்றறிக.

குன்மவியாதிகள்—பிறர்பசியினால் வருந்துவதைக் கண்ணுற்றும் அன்னமிடாமல் உண்டதாலும் ஒருவரிடம் உண்டியைத் தடுத்தலாலும் வயர்யெரியக்கெடுதலாலும் அபாண்டமான குற்றங்களைச் சுமத்திவயரெரியக் காண்டலாலும், குடும்பத்தைக் கலைத்தலாலும் குன்மம், யெரிகுன்மம், சூலைகுன்மம், தொண்டைக் கட்டிகள் இவைஉண்டாகும் அன்றியும் நெல் உமி கல் இவையுண்பதால்வயற்றில் சோறைசேர்ந்து குடலில் மாசுபற்றியும் உண்டாவதுண்டு இவ்வித குற்றங்களா லுண்டாகும் (7) வித குன்மங்களையும் அவுழ்தங்களால் நீக்க சாத்தியப்படும்.

பித்தபயித்தியம்—பெரியோரை நிந்தைசெய்தல் தேவஸ்தலங்களையழித்தல் தூஷணைசெய்தல், ஸ்ரீகள்கெற்பநோயில் விந்துவிடல்,சிசுவை மரித்தல், கன்றுக்குப் பால்விடாமல் கரத்தல்,யிளம்பயிரையழித்தல்,பிஞ்சுகளைபரிக்குதல், இவைகளால் பித்தம் மயக்கவியாதி பித்தபயித்தியம் பித்தவாய்வு சேஷ்டைகள் உண்டாகுமென்றறிக.

பாண்டுநோய்—தாய் தந்தையர் மனம்நோகவும்பேசல், அவர்க்குபயமுறவும் தண்டிக்க முயலுதல், மனிதரை வம்புசெய்தல், ஆங்காரத்தால் அகந்தை யிடும்புயியற்றல்,பொய்பேசல், இவைகளால் பாண்டுமகோதரம் பெருவயர் இவை வந்தணுகு மென்றறிக, அன்றியும் ஜீவருக்கு நஞ்சிடுதலாலும் க்ஷைரோகம் சம்பவிக்குமென்றறிக.

பிளவைகண்டமாலை—குருதூஷணஞ்செய்தல், வழியில்முள்ளடைத்தல், மரங்களை காரணமின்றிபூவுதிரவும்

கிளையொடியவும் அடித்தல்,கல்லெறிதல்,பச்சை க்கொடி பூசைகட்குயன்ற பூஞ்செடி யிவைகளை நிஷ்காரணமாய் வெட்டல்,கிள்ளல், இரண்டாய் பிளந்தெறிதல், இவைகளால் பிளவை கண்டமா லையுண்டாகும்அன்றியும் தன்பார்வைக்கெட்டா விடங்களில் கட்டிகள் புரைவிழும் ரிணங்கள் கரப்பான் வண்டுகடி குழிப்புண்கள் உண்டாம் யென்றறிக.

குடைச்சல்கள்—ஜீவஜெந்துக்களின் கைகால்களை முரித்தெறி தல், ஊர்வன பரவை பட்சி காகம் நாகம்இவை களை காரணமின்றி வலிவிற் கொன்ற தோஷத் தால் கை கால்களில் குத்தல் குடைதல்கரணைக ளிற் பிடிப்பு முடக்குவீக்கம் இவைகள் அணுகு மென்றறிக.

குட்டங்கள்—ஸ்ரீகள் விசேஷசம்பந்தத்தா லுண்டான மேகம் கிரந்தி இவைகளால் (௬) விதகுட்டமும், மண் ணுளியன் முதலிய சர்ப்பக்கடி வண்டு எலி பூச்சி யிவைகளின் கடியாலுண்டாவது அ, விதகுட்ட மும், ஜீவவதை மாதாபிதாக்கள் மனநோக்காட் டாலும் தெய்வவுருக்களை யழித்தலாலும் பெரி யோரை பங்கப்படுத்தி மனம்குன்றச் செய்வதா லும் (௪) விதகுட்டம் ஆக (௰அ) குட்டங்களின் காரணமென்றறிக.

சுரரோகம்.—நீரிலுள்ள ஜெந்துக்களை ரவியில்போடல்,நெருப் பிலிட்டு சுடுதல், தசையருத்தல், தண்ணீர் கொ டாதல், சூரியனை நினையாததோஷம், இவற்றால் சுரரோகம்வந்தணுகும் அன்றியும்சுரத்தில் மூன் றுவிதமுண்டு அஸ்தியைப்பற்றியசுரமானது தா கம்மிகுத்து தேகம்வெளுத்து குளிர்ச்சி யடுத்து ஒவ்வொரு வேளையில் சுரம் மிகுதியாய் காணு முதிரத்தைப் பற்றிய சுரமானது அதிகமாய்க்

காய்ந்து யிளைப்பு வேர்வை மூர்ச்சை சித்தப்பிர மைஉடல்னேகும் தாகிக்கும் மாமிஷத்தைப் பற்றிய சுரமானது சமானகாச்சலும் அதிக சுவாசமும் மூர்ச்சையும் மயிர்கூச்சும் ஆயாசம் நோக்காடு நமைச்சல் இவைதரும்.

கண்டமாலை—மேகநீரானது நரம்புவழியாய் சென்று உதிரங் கெட்டு கட்டிபோல் திரண்டு ரிணமாகி கண்டத்தைச் சுற்றி யரித்து தடித்து வெடித்து புரையோடும்.

மகோதரம்—அக்கினியதிகரித்து நீருண்டாகிதிரேகம்கனத்து வயற்றில் வாய்வும் ஜெலமும்சேர்த்து பெருகச் செய்யு மிராக்கால் நெஞ்சுவரண்டுதாகிக்கும்.

பேறுவயறு—ஞானிகளை நிந்தித்து பழித்துயிகழ்தலானும், ஜீவஜெந்தை வதைத்தலானும் நேரிடும் அன்றியும் தேகம்வெளுத்து வற்றி கருவிகள் மந்தித்து வயறுபெருக்கும் மலந்தீயும் அன்னஞ்செல்லாது.

நீராம்பல் — தேகம்வெளுத்துவற்றி மார்பின் கீழ்வயரும்காலும்வீங்கி தாகித்து புளிப்புமீதுஉண்டாக்கும்.

பிரநீர்க்கோவை—தேகத்தில் அக்கினிமீரி நீர்கோர்த்து கண்டவர் பயப்படும்படி பெரும் பூதம்போல் வீக்கமுண்டாக்கும்.

நீராமை—ஆமைபோல் வயற்றில் கட்டியுண்டாம் குடல்முருக்கிஅக்கினிசுவாலையா யன்னத்துவேஷமாகும்.

பீலிகை—வயற்றில் யீரலைப்பற்றி குழவிபோல்திரண்டு குருக்கேயிருந்து பிரளும் மேலேரும்உடல்வற்றும்.

பீனிசம் —மூலத்தில் கனல் அதிகப்பட்டு சிரசில்நீர்தங்கிநாசி வழியாய் உதிரமாயும் சீழாயும் ஜெலமாயும் வெளிவரும் இது (அ) வகைப்படும்.

வாதபீனிசம்—நாசி வரளும் நீர்வடிந்து சளி நாற்றமில்லாமல் வரும்.

பித்தபீனிசம்—நாசிவழியாய் மஞ்சள் நிறமாய் சளி வடியும் புலால்நாற்றம் வீசும்.

சிலேத்துமபீனிசம்—நாசியை மாரிமாரி யடைத்து மூத்துபோல்நீர்வடிந்துநாறும் துணுக்காக சளிவிழும் நாசியில் ஊசிபோல்குத்தும் கண்ணில்பீளைசாறும்.

நீர்பீனிசம்—நாசியில் நீர்வடியும் மழைகாலத்தில் பிடரியும் முகமும் வூரலுண்டாகும் அடிக்கடி தும்மல்வரும் தலைகழுத்து வலிக்கும்.

சீழ்பீனிசம்—கபாலத்தி லதிகவெப்பங்கொண்டு கபால முதல் நாசிவரையில்புண்ணாகிசீழ்வடியும்தலைவலிக்கும்

உதிரபீனிசம்—கபாலத்தில் வட்டவட்டமாய் புண்ணாகி நாசி வழியாய் உதிரம்வரும் தலைவலிக்கும்.

சிராய்பீனிசம்—நாசியில் யீருள்வீகூடுபோல் சீழ் திரண்டுவரும் மணம்தெரியாது விடாமல் தலைவலிக்கும்,

நவமூலம்—உள்மூலமென்பது அபானத்தில் சதைவளர்ந்திருக்கும் பிரமூலம்பணைவாயில் கத்திபோ லிருக்கும் இரத்தமூலம் முளைவெளிவந்து இரத்தம்வடியும் சீழ்மூலம் அடிவயறு நொந்து மலத்துடன் சீழ் வரும் மூலபாண்டு சரீரம்வூதி வயற்றில் மலம்

கட்டும் முளை மூலம் வெளிதள்ளி மலமிரங்கும் வாதபித்த சிலேத்தும மூலமானது மேற்கண்டவைகள் ஒன்றோடொன்று மிசிரமாகும்.

காமாலை—உதிரங்கெட்டு தசைவெளுத்து யீரல் கருகி தசைகளில் கிருமிகள்பட்டு மாமிசத்தைத்தின்று மஞ்சள்நீர் கொள்வதன்றி பலவியாதிகளை யுற்பவம் செய்யுமென்றறிக.

சோகை—சோகையானது பாண்டு ரோகத்திலிருந்து நீர்கெட்டு சோகைரோகம் வந்தெய்துமென் றறிக.

அதிசாரம்—வயிறுபொறுமி சரீரம் வாடும் மலம் கருமையாகவும் நுரையுடனும் காணும் இதற்கு வாத அதிசாரமென்று பெயர்.

பித்தஅதிசாரம்—மலம்பசுமையோடும் சிதாத்தம்விழும் அபானத்தில் கடுக்கும் இவைபித்தாதிசாரம்.

சிலேட்டுமஅதிசாரம்—மலம் வெண்மையாகவும் சீதம்நுரையாகவும் காணும்

சுரஅதிசாரம்—சுரங்காயும் வயிறுகழியும் சீதமும்இரத்தமும் விழும்.

அசாத்தியஅதிசாரம்—மலம் ஊன்போல துணுக்கைதுணுக்கையாய்விழும் தேன்போலும் கரிபோலும்காணும்,

வியாதிகளின்வரலாற்றுப்பரணி

முற்றிற்று.

உ

தேவிசகாயம்.

மூன்றாவது

இங்கிலீஷ்வகைபராணி.

இங்கிலீஷின் அவுஷதங்கள் அளவிறந்த தாக யிருப்பினும் சகலரும் இலேசில் கையாளத் தக்கவை மாத்திரங் கூறப்படும்.

அசீரணத்திற்கு.

(பெப்பிரமெண்டாயில்) (2) துளிமுதல் (5) துளிவரையில் நல்லஜெலத்திலாகிலும் சக்கரையிலாகிலும் கொடுக்கவும் இப்படி (3) மணிக்கொருமுறையாக இரண்டு மூன்றுவேளை கொடுக்க பசிதீபனமுண்டாகும்.

கீல்வாய்வு வீக்கம் பிடிப்பு.

இதுகட்கு.

(லிடில்சு) (ஓரியண்டல்பாம்) என்னும் அவிழ்தத்தை கொண்டுவந்து கீல்நோய் குத்தல் குடைதல் வீக்கமுள்ளவிடங்களில் முன்னதாகவே ஆத்துமணலைக் கொண்டுவந்து வருத்து மெல்லியசீலையில் முடிந்து ஒத்தடம் கொடுத்து ஷை யிடங்களில் நன்றாய் சூடு உண்டானபிறகு மேற்கூறிய லிடில்ஸ்சு ஓரியண்டல் பாம்பென்னும் அவுழ்தத்தில் கொஞ்சம் தொட்டு அந்தப்பாகங்களில் தேய்க்கச்செய்யவும் தடவியயிடங்களில் அந்தத்தயிலம் தோற்றப்படாமல் உள்ளுக்கே கிரகிக்கும்படி மிக்கவலிவுடைத்தாய் தேய்க்கவேண்டும் இப்படி காலைமாலை இருவேளையும் தேய்த்துவரில் சவுக்கியமாகும்.

வாதம் இடுப்புவலி பக்கசூலை பாரிசவாய்வு திமிர்வாதம் இதுகட்கு.

மேற்கூறியபடி ஆத்துமணலை மிக்கசூடு கொள்ளும்படி வருத்து துணியில்முடிந்து நோய்வுள்ளபாகங்களில் நன்றாய் சூடெழும்ப ஒத்தடம்போட்டு பிறகு (விடில்சு ஓரியண்டல் பாம்) யென்னும் தயிலத்தை தேய்க்கவும் நாலுமணிநேரத்திற்கு ஒருமுறையாக ஒருநாளைக்கு மூன்றுவிசை உபயோகப்படுத்தவும் ஆக்ஷேபணையின்றி சவுக்கியப்படும்.

தொண்டைநோய் இருமல் மார்சீதளம் இவைகட்கு.

மேற்கூறிய விட்டில்ஸ் ஓரியண்டல்பாம் யென்னும் தயிலத்தை மார்பிலும் தொண்டையிலும் முதுகிலும்கழுத்திலும் கீழ்மட்டும் நன்றாய்தேய்த்து உடனேமார்பிலும் கழுத்திலும் பிளானல்முதலிய உயர்ந்த கம்பளிப்பட்டைகளினால் சுற்றி வைக்கவேண்டியது இப்படி இரவும்பகலும் கூடிய இரண்டு நாள் உபயோகப்படுத்திவரில் சவுக்கியத்தையுண்டுபண்ணும்.

சுவாசக்குழாய் தாபனம் இரப்பு முதலியவைகட்கு.

பத்துநிமிஷம் அல்லது கால்மணிநேரம்வரையிலும் ஷை தயிலத்தை மார்பிலும் முதுகிலும் நன்றாய் தேய்த்து அவைகளை கம்பிளியினால்சுற்றி சூடுண்டாகும்படி செய்வித்துவரில் சுகத்துக்கனுகூலமாகும் சீதளநோய் உள்ளவர்கள் ஷை தயிலபுட்டியை கார்க்குத்திறந்து முகருவார்களானால் அனுகூலத்துக் கிடமுண்டாகும் ஒரு கோப்பையில் கொதிக்கக் காய்ந்த தண்ணீரில் ஒருடீக்கரண்டி தயிலத்தைவிட்டு அதிலுண்டாகும் ஆவியை மூக்கின்வழியாய் உட்கொள்ளவேண்டியது.

தலைவலி ஒருதலைவலி யுள்ளவர்கட்கு.

கன்னப்பொரியிலும் நெற்றியிலும் கழுத்தின் பின்புரத்திலும் காதின்பின்புரத்திலும் மெதுவாயும் நன்றாயும்தேய்க்க

வேண்டியது நோய் முகத்தில் இருக்குமானல் கன்னத்தில் நன்ருய் தேய்க்கவேண்டியது.

ஈளையினுல் சகிக்கிற குழந்தைகட்கு.

முதலாவது வாந்தியுண்டு பண்ணும்படியாய் கொஞ்சம் படிகாரஜெலம் அல்லது பச்சை வெங்காயமும் கொடுக்கவும் பிரகு தயிலத்தை கழுத்துமுழுவதும் மார்புமுழுவதும் நன்ருய் உபயோகித்து குழந்தையை கம்பிளினுல் சுற்றிவைக்கவும்.

பல்லுநோய்க்கு.

லிடில்ஸ்சு ஓரியண்டல்பாம் என்னும் தயிலத்தை கொஞ்சம் பஞ்சியினுல் தொட்டு பல்லுநோ யுள்ளயிடத்தில் அல்லது அதற்கருகில் வைக்கவும்.

வயற்றுப்பிடிப்பு வயற்றுவலி.

வயற்றுவலி அல்லது வயற்றுப் பிடிப்புள்ளவர்கள் உடனே அந்தபாகத்தின்மீது ஷை தயிலத்தில் கொஞ்சம்தொட்டு தேய்க்கவும் ஒருமணி நேரத்திற்கொருகால் உபயோகப்படுத்தினுல் அப்பொழுதே குணப்படும்.

இசிவு அல்லதுஜன்னிக்கு.

மார்புகழுத்து சுற்றிலும் முதுகு அல்லது கழுத்துப்பின்புரத்தின் கீழ்பாகத்திலும் நன்ருய் தேய்த்து கம்பளியால் சுற்றி சூடுண்டாக்கிவைக்கில் குணத்திற்கிடமுண்டாம்,

தேள்குளவிபூரான்கடிக்கு.

ஷை விஷசெந்துக்கள் கொட்டுதல் அல்லது கடித்தயிடத்தில் இந்த தயிலத்தை நன்ருய் தேய்த்துவிட்டு பின்பு அதேயிடத்தில் இந்த தயிலம் கொஞ்சம் யிருக்கும்படி வைக்கவேண்டியது.

பித்தத்திற்கு.

(சல்பர் காஷ்டிக்டிலியுடம் டிஞ்சர் காடனம் டிஞ்சர்சிஞ்சி பரீஸ்சுகர்) கொஞ்சம்தண்ணீரில் கொடுக்கவும் அல்லது சோடா கல்ம்பாதூள் பிஸ்மத் ரேவல்சீனி தூளாக்கி (15) குன்றியிடை கொடுக்கவும்.

நீர் ஒழுக்கிற்கு.

(எகஷ்டிருக்ட் பெல்டோனு) கால்கிரையன் ஓப்பியம் கால்கிரையன், கொயினைன் கால்கிரையன், இவைகூட்டி மாத்திரைசெய்து வேளைக்கு ஒன்று அல்லது இரண்டு கொடுக்கவும்.

வயற்றுக்கிருமிகட்கு.

(சாண்டனின்) பெரியவர்க்கு (5) கிரையன்யெடுத்துகொஞ்சம் சக்கரையில் கலந்து கொடுக்கவும் சிறுவர்களுக்கு (1) கிரையன்முதல் தேகதிடப்படி (4) கிரையன் வரையில் சக்கரையில் கலந்துக் கொடுக்கவும்.

ஒருதலைநோய்க்கு.

காஜிபுட்டாயில், சிலம்நாயில், வோலியம் காசு இவைகளில் யெதுவாகிலும் தடவலாம் உடனுக்குடன் சற்றுசவுக்கியத்தை யுண்டாக்கும்.

சீதளம் ஜலுப்புக்கு.

ஷை ஆயில்களில் யெதுவாகிலும் கழுத்தைச் சுற்றியும் பிடரியிலும் கொஞ்சம் தடவித்தேய்த்து நாசியில் கொஞ்சம் முகரவும் குணப்படும்.

வாய்வுகளுக்கு.

வாய்வுகுத்தல் குடைதல் பிடிப்பு இப்பேர்க்கொற்ற வியாதிகள் உள்ளபாகங்களின்மீது வருத்தமணலை மூட்டைக்கட்டி ஒத்தடம் கொடுத்து நன்றாய் சூடேறினபிறகு மேற்கூரியபடி ஆயில்களிலெதுவாகிலும் கொஞ்சகொஞ்சமாய்விட்டு

நன்ருய் தேய்க்கவும் தயிலங்க்ள் மேல்புரம் தோற்ருமல் உள்ளுக்கு கிரகிக்கும்படி அழுத்தமாய் தேய்க்கவும் இப்படி காலைமாலையாக இரண்டொருநாள் உபயோகப் படுத்திவரில் சவுக்கியமுண்டு.

இதுவும் வாய்வுகட்கு.

பட்டாஸ் நயின்டர்ஸ், பொட்டாஸ் அயோட்டம்யிவைகளை நல்லதண்ணீரிலாகிலும் பிராந்தியிலாகிலும் அறை அல்லது முக்கால் டிராம் உள்ள அளவில் ஷை அவுழ்தம்கொஞ்சம் கலந்துகொடுக்கவும்.

வெள்ளைக்கு.

கொப்பாப்பியா (10) துளிமுதல் (30) துளிவரையில்சக்கரையில்கலந்து கொடுக்கவும் இப்படி காலை மாலை (3) நாள் சாப்பிடத் தீரும்,

இதுவும் வெள்ளைக்கு.

மூங்கில் உப்பு, மாசிக்காய், வால்மிளகு, மூன்றும் சம நிடைகொண்டு யிடித்து வஸ்திரகாயஞ் செய்து (கொப்பாப்பியா) விட்டு பிசைந்து லேகியம்போல் வைத்துக் கொண்டு கழற்சிக்காயளவு இருவேளையும் சாப்பிடவும்இச்சாபத்தியம்.

சூதகவாய்வுக்கு.

(பில்ஆலோஸ் யெயிட்மர்) 5-கிரையின் புசித்து உடனே நல்லஜெலம் நாலுமுழுங்குசாப்பிடவும் இப்படி இரண்டொருநாள்செய்ய அல்லது சவுக்கியப்படுமளவும்உபயோகிக்கவும்

கொருக்கிற்கு.

காஸ்டிக் டெஞ்சுபுரு, அயிண்டுமெண்டு இவை கூட்டி நன்ருய்சேகித்து ரிணத்தின்மீது தடவிவரவும்.

கண்ணேய்க்கு.

ஜிங்சல்பாஸ் காலணுயெடை ஒருடமிளர் ஜெலத்தில்விட்டு கிளாசில் வைத்துக்கொண்டு துணியில்தொட்டு நேத்திரத்தில் துளிதுளியாக தீட்டிவரவும்.

இதுவும் கண்ணோய்க்கு.

ஒரு டமிளர் ஜெலத்தில் அறைபலம் (சுகர்லட்)போட்டு கலெக்கி மெல்லியசீலையால் தொட்டு கண்களில் படும்படி நீட்டி வரவும் சவுக்கியமாம்.

சுரங்களுக்கு.

கொயினன், சின்கொயினன், (உ) குன்றி தேனிலாகிலும் கெந்தக திராவகத்திலாகிலும் கொடுக்கவும்.

முறைக்காய்ச்சலுக்கு.

பவுலர்ஸ் ஸோலிஷன், திராவகம் பித்தகியாழத்தில் (2) துளிமுதல் 5, துளிவரையில்தேகத்திடங்கண்டு கொடுக்கவும்.

இருமலுக்கு.

டிஞ்சர்கேம்பர் திராவகம் (10) துளிமுதல் (30) துளிவரையில் நல்லஜெலத்தில் கொடுக்கவும் இப்படி யிருவேளையும் கொடுக்க வேண்டியது தேகத்தின் பலமரிந்து துளிகளை குரைத்தும் உயர்த்தியும் உபயோகிக்கவும்.

இதுவும் இருமலுக்கு.

டிஞ்சர்சில்லி டிஞ்சர் அய்யாசாமி இந்த திராவகங்களையும் (10) துளிமுதல் (30) துளிவரையில் கொஞ்சம்ஜெலத்தில்கலந்துகொடுக்கலாம் இருமல்சுவஸ்தப்படுமளவும்உபயோகிக்கவும் சீதளபதார்த்தங்களை அனுசரிக்கக்கூடாது.

வயற்றுவலிகட்கு.

டிஞ்சர் ஒப்பியம் (5) துளிமுதல் (15) துளிவரையில்தேகதிடமரிந்து ஒருடிராம் நல்ல ஜெலத்தில் கலந்துக் கொடுக்கவும் இப்படியிருவேளையும்.

இதுவுமது.

டிஞ்சர் அசப்பட்டிடா (10) துளிமுதல் (30) துளிவரையில் ஒருடிராம் நல்லதண்ணீரிற் கலந்து கொடுக்கவும்.

இதுவுமது.

சோடா (25) குன்றியிடை எடுத்து கொஞ்சம் சக்கரையில்கலந்து கொடுக்கலாம்.

விரைநோய்க்கு.

டிஞ்சர் அயிடியன் நோயுள்ள பாகத்தில்தடவிபோஸ்தக்காய் கியாழம் காப்பிடம் கொடுக்கவும்.

குடைச்சல்களுக்கு.

லெனிமண்டம் பெல்டோணு, கேம்பர்குளோர்ட்பாரம், லைகர் அமோனியா, லெனிமண்டம் ஒப்பியம், இவைகளை சமபாகமாகக் கலந்துக்கொண்டு குடைச்சல்உண்டாகிய பாகத்தின்மீது கொஞ்சங் கொஞ்சமாய்த் தடவி சூடுண்டாகத்தேய்க்கவும் ஒருநாளைக்கு இருமுறையாக சுவஸ்தப்படுமளவும் உபயோகிக்கவும்.

பக்கயிழுப்புக்கு.

எம்பிளாஷ்டகம் பெல்டோணு யிழுப்புள்ள பாகத்தில் நன்றாய்த்தேய்த்து திரும்பவும் தடவிவைக்கவும்.

அதிசாரபேதிக்கு.

சில்பேட் ஆப்காப்பர் ௧, கிரையனும் ஒப்பியம்-௧, கிரையனும் கலந்துகொடுக்கவும் துவர்ப்புள்ள குழம்பு துவையல் அனுசரிக்கவும்.

நீர்துவார அடைப்பு அல்லது எரிவுக்கு.

வால்மிளகு விராகனிடை (கஉ) நன்றாய் பொடித்து வஸ்திரகாயம்செய்து நிறுத்தெடுத்து (10) பலம்ஜெலத்தில் கரைத்து ஒருதினத்திற்கு நாலுதரம் பாகித்துக்கொடுக்கவும்.

அஜீரணபேதிக்கு.

காசுக்கட்டி விராகனிடை (உ௦) லவுங்கப்பட்டை விராகனிடை (௰) ஆறுபலம் தண்ணியை அடுப்பிலேற்றி முக்காலே அரிக்கால்பலம் கற்கண்டைப்பொடித்துப்போட்டு பாகுசெய்துக்கொண்டு மேற்படி இரண்டு சரக்கும் தூள் செய்துஅந்த பாகில்போட்டு லேகியம்போல கிளரிவைத்துக்கொண்டு ஒரு வேளைக்கு காலே அரிக்கால் முதல் முக்கால்பலம் வரையில் கொடுக்கலாம்.

மாரில் கபமில்லாத வரட்டிருமலுக்கு.

நரிவெங்காயம் விராகனிடை காலேவீசம், சுக்குத் தூள் (க) விராகனிடை, கபநாயகம் அரையே அரிக்கால் விராகனிடை, சோம்பு குன்றியிடை, இவைகளை (க) விராகனிடை கற்கண்டுபாகில் சேர்த்தரைத்து இரண்டு குன்றியிடை மாத்திரை செய்து 5, மாத்திரைவரையில் கொடுக்கலாம்.

இங்கிலீஷ்வகைபரணி

முற்றிற்று.

இன்னம் அனேக அற்புதமான
அவிழ்தமுறைகள் ஐந்தாம்பாகத்தில்
வெளியிடப்படும்.

உ

தேவிசகாயம்.

நான்காவது

மகான்களால் கையாண்டுவந்த

பெருமருந்துபரணி.

இராமபாண இடிமருந்து.

இடிமருந்து * அரிதாரங் காந்தம்வெள்ளு
வெட்டிவிதை செங்கொட்டை சித்ரமூலம்
வடிமருந்து * ரசங்கெந்தி மஞ்சள்ஓமம்
மாசிக்காய் ஜாதிக்காய் வசம்பீருள்ளி
குடிமருந்து * கொள்ளுக்காய் துருசுதுத்தம்
கோழிமுட்டை இந்துப்பு கோட்டங்கார்கோல்
அடிமருந்து * தக்கோல மக்கிராகாரம்
அமைத்திடித்து கலசமிட்டு அறையக்கேளே. 1

அறையக்கேள் யோனிதன்னி லிங்கந்தன்னில்
அண்டத்தில் புடைகரப்பான் புரையின்புண்கள்
விரையக்கேள் மூக்கெரித்தல் கரப்பான்சூலை
வெடிப்புத்துக் குலைபுத்து யீரல்புத்து
விறையக்கேள் வெண்குட்டம் குரைநோய்குட்டம்
விழித்திருப்பன் விணைத்தண்டின் விஷநீர்புத்து
முறையக்கேள் முடியாத முடக்குசூலை
மூட்டோடே வியாதியெல்லாம் போமுண்பீரே, 2

உண்பீரேல் பத்தியந்தா னிதற்கோயில்லை
உயிரான யிடிமருந்து ராமபாணம்
உண்பீரேல் சிறுசுண்டை யளவிலேதான்
உற்றதொரு மோருஞ்சோ றுண்டுமுன்னே

---

* இடிமருந்தென்பது-வெடியுப்பு.
* வடிமருந்தென்பது-சாராயம்
* குடிமருந்தென்பது-கெஞ்சா.
* அடிமருந்தென்பது-சவுக்காரம்.

உண்பீரேல் அடுத்தடுத்து மூழ்கிமூழ்கி
உள்ளபடி மண்டலமே செல்லுமட்டும்
உண்பீரேல் தேகமது பொன்போலாகும்
உள்ளபடி பூவையரைப் புணர்ந்திடாதே. 3

புருடருக்கும் பூவையர்க்கும் சொல்லுவன்கேள்
புணர்ச்சிதள்ளி யிருக்கட்டும் மூன்றுமாதம்
இருடருக்கும் பிணியேது ராமபாணம்
எந்தெந்த நோய்வரினும் யெமன்வந்தாலும்
திருடருக்கு பலிக்குமது ராமபாணம்
சித்துவிளை யாடுமடா சிவன்மேலாணை
குருடருக்கும் செய்முறையாய் ஜெயமேயாகும்
கோதண்ட ரகுராமர் பாணந்தானே.

ஸ்ரீமகான் சொக்கலிங்கப் பரதேசி யவர்கள் கையாண்டுவந்த

சமாரித்தைலம்.

அழுஞ்சிவிதை	புன்னைவிதை
கடுக்காய்விதை	புங்கம்விதை
தாணிக்காய்விதை	கார்கோலரிசி

இந்த ஆறுவித்துகளையும் சமபாகமாய் நிறுத்தெடுத்து ஒரு பாண்டத்தில்போட்டு சிறுவர்களின் சிறுநீர்விட்டு (உம) நாள்ஊறியபிறகு (உக)வது நாள்யெடுத்து நிழலில் உலர்த்தியெடுத்து அத்துடன் மிளகு நாழிபோட்டு கலந்துக்கொண்டு (ரு) தமருள்ள பாண்டத்தில் சரக்குகளைப்போட்டுவாய்ப்பாட்டுக்கு பானைகவிழ்த்து சீலமண்செய்து உலர்ந்தபிறகு அடியிலுள்ள தமருக்குநேராய் சிறுபாண்டம்பொருந்தச்செய்து பூமியில் அப்பாண்டம் தெரியாமல் புதைத்து சரக்குள்ளபாண்டம் துவக்கி வரட்டியடிக்கி குழித்தயிலம்யிரக்கவேண்டும்.

நடுபாண்டத்திலிருந்தே வரட்டியடுக்க வேண்டியதான போதிலும் மூன்றுபாண்டங்களும் பூமிக்குள் இருக்கும்படி பெரும்பள்ளமாக வெட்டி சுற்றளவுக்கும் பாண்டத்திற்குப் பொருத்தமாக வரட்டிகள் அடுக்கிகுருத்தியானத்துடன் அக்கினியிடவேண்டியது அவ்வாறு சுசிகரத்துடன் பிறர் சஞ்சரிக்காத மறைவிடமான யிடத்தில் வைக்கவேண்டிய குழிப் புடத்தின் அருகில் தயிலம்யிரங்குமளவும் நிர்வாணிபூசைசெய்யவேண்டியது.

{ ஓம் கிலியும் சௌவும் ஐயும் றீயும் வறீயும் கிறீயும் ஆம் ஊம். }

எனகுழியின்நிதானம் அறிந்து தயிலம் இரங்குமளவும் இந்த ஒன்பது வாக்கியமும் புருவ நிதானத்துடன் ஓதி யிருந்து பிறகு தயிலத்தை சீசாவில் யிருத்து வைத்துக் கொள்ளவும்.

இந்த தயிலத்தினால்

கிருமிவியாதிகள்.

வைத்திருந்த தயிலத்தை கொஞ்சந்தொட்டு
மயிர்நுனியில் தடவிவிடக் கருத்துபோகும்
எய்த்திருந்த வெடிசூலை கண்டமாலை
எண்ணூறு சொறிசிறங்கு கரப்பானெல்லாம்
உய்த்திருந்து கெட்டோடுந் தயிலந்தன்னை
ஓடிகுறவு நோய்களுக்கு பூசிப்பாரு
மொய்த்திருந்த நோய்களெல்லா மோடிப்போகும்
முழித்திருந்து தயிலத்தை மூழ்குவாயே. 1

மூழ்கையிலே விஷநீரு முடிசிரங்கு
மூர்க்கமுள்ள தலைவெட்டி மேகந்தீரும்
மாய்கையிலே புழுவெட்டி ரோகந்தீரும்
மகிமையிலே மயிரதுவுங் கருத்துபோகும்

மூழ்கையிலே யசாத்தியநோய் நடுக்கல்தீரும்
முடிசிரங்கு குருந்தடிப்பு வினையுந்தீரும்
ஆழ்கையிலே பாம்பரணை கடியுந்தீரும்
அரணைகடிச் சிலந்திகடி * வாளம்போமே. 2

போமென்ற குழிவாழை மூட்டுவாழை
புடைத்தெழுந்த துடைவாழை முதுகுவாழை
ஆமையடி ஊமையடி சிலந்திவாழை
அப்பனே சொல்லுகிறே னன்பாய்த்தானே
வேமென்ற கண்ணூசி யிடுப்புசிட்டை
இருபுடரி நுனிநாசி சிலந்திபுத்து
தாணுச்சி மிளவையிமை கண்மேல்வாதம்
சரிநேத்திர பிளவையிதில் தணியும்பாறே. 3

தணிவான பெண்குறிமேல் கரப்பான்கட்டு
தடர்சிலந்தி படர்சிலந்தி யல்குல்புத்து
பிணியான பவுத்திரமும் முளைமூலந்தான்
பின்கரப்பான் முன்கரப்பான் அண்டபுத்து
துணிவாதஊந்திப்புண் துடையில்புத்து
துடிசூலை யிடிசூலை மேகசூலை
கெணியாத அலைகடிமேல் யிலைமேற்புண்கள்
கீழ்க்குநாக்கு மேல்நாக்கு புத்துப்போமே. 4

புத்துபோம் யிருபிளவை நகத்தின்சூலை
புரைவிழுந்த படுஞ்சிரங்கு நிறுத்தும்பாறு
அத்துப்போம் நாக்குண்ணி மூக்குண்டபுண்ணு
அகலாத நோய்களெல்லா மகன்றுபோகும்
வெத்துப்போம் முனையான நோய்களெல்லாம்
விழிமுழிங்கி யிமைமுழிங்கி வெகுநாள்புண்கள்
செத்துப்போம் இத்தனைக்கும் பூசும்போது
தீர்ந்துப்போம் யின்னமுண்டு சொல்லக்கேளே. 5

சொல்லக்கேள் நல்லரவம் விரியன்பாம்பு
சூழெலிகள் குருட்டெலிகட் புடையன்மூக்கன்

* வாளம் என்பது வாளவிரியன் ஓர்பாம்பு.

வெல்லக்கேள் தேளோடு நட்டுவாக்காலி
விஷமுள்ளு தைத்தாலும் பூசுபூசு
இல்லக்கேள் ஒழிந்துவிடும் விஷங்களெல்லாம்
இத்தயிலம் வெகுசுருக்கு மெத்தநன்று
கொல்லக்கேள் விஷங்களோடு நோய்கள்யாவும்
கொல்லவென்றே யித்தயிலம் கூறினேனே. 6

கூறினேன்புகையிலையும் புளியுந்தள்ளு
கூர்ரியபச்சைமீன் தள்ளுதள்ளு
மீறியேதிண்ணுதே அசனத்தைத்தான்
மிழுங்காதேயுரங்காதே மிகச்சொல்லாதே
ஏறினேன்யென்றவரை யிகழ்ந்திடாதே
யேசாதே வையாதே திட்டாதேநீ
ஆரியேபதமாக உண்டால்மைந்தா
அமுர்தமது தன்னிலையாய் நிலைக்கும்பாரே. 7

குருதுணையுண்டாகவும்.

சகலமேகராஜாங்க

ரசகெந்திமெழுகு.

இரசம்	வாலுழுவை
கெந்தி	சோம்பு
ரசகற்பூரம்	ஏலம்
அரிதாரம்	ஜாதிக்காய்
காந்தம்	மிளகு.
துருசு	சீரகம்
துத்தம்	கார்கோலரிசி
முதார்சிங்கு	மாசிக்காய்
சுக்கு	தேவதாரம்
ஓமம்	வாய்விளங்கம்
மஞ்சள்	வசம்பு
திப்பிலி	லவுங்கம்

அரத்தை
கோஷ்டம்
கருஞ்சீரகம்
காட்டுசீரகம்
மூந்திரிக்கை
பிரம்மிமூலம்
நீர்பூண்டு
கொள்ளு
தேங்காய்
சின்னிவேர்
சங்கம்வேர்
பரிங்கிசெக்கை
சேங்கொட்டை
கடுக்காய்தோல்
சிறுதேக்கு
தாளிசம்
யெட்டி விரை
தேற்றான் வித்து
எள்ளு
அமுக்குராவேர்
சித்திரமூலம்
கொப்பரைதேங்காய்
கொல்லங்கோவை

இவைகளை வகைக்கு ஒரு விராகனிடையாக நிருத்தெடுத்து கல்லுரலில்யிட்டுயிடித்து வஸ்திரகாயம்செய்து அத்துடன் இரண்டுகோழிமுட்டைகளை உடைத்துஊற்றி பிறகுநிருத்தெடுத்து அதுயிருக்கும் இடைக்கு சரியிடை பழையபனை வெல்லஞ்சேர்த்து கல்லுரலில் போட்டு பூணில்லாத மரஉலக்கையால் மைபோல் குத்தியெடுக்கவும்.

இதனால் தீரும்வியாதிகள்.

குத்தப்பாயிதுநேரே பனைவெல்லந்தான்
குணமாகநால்ஜாமம் யிடித்துத்தீரும்
பெத்தப்பாவழித்தெடுத்து சிமிழில்வைத்து
பேதமில்லைசுண்டைக்காய் வீதங்கொள்ள
முத்தப்பாமோருஞ்சோ றுண்டுமுன்னே
முசியாமல்மருந்துண்ணு மண்டலந்தான்
சித்தப்பாமுழுகுநாள் மருந்துண்ணாதே
சிரப்பாகபத்தியந்தா னில்லைபாறே. 1

தானென்றவெடிசூலை மேகசூலை
தயவானயிடிசூலை புடைக்குஞ்சூலை
வானென்றதுடிவாத சூலையோடு
வளமானகால்குடைச்சல் கரணைதீரும்

மானென்றஆம்புவிப் புருதிமாலே
மதியாதகுட்டமொடு விஷநீர்தீரும்
கோனென்றகுரைநோயும் சிரங்குதீரும்
குணமானபுழுவெட்டு நடிப்பும்போமே. 2

போமேநீயோனிதன்னில் லிங்கந்தன்னில்
பொலிவானஆமையடி சிலிந்திமேகம்
தாமேநீசெங்கிரந்தி கருங்கிரந்தி
தயவானஅரிகிரந்தி பொரிகிரந்தி
வாமேநீபருங்கிரந்தி யிடிகிரந்தி
வளமாகயிடிவிழுந்த புரைமேற்புண்கண்
ஆமேநீஅரைக்கடியுந் தண்டிற்புண்ணு
அடைவானகுள்ளிமா தேவியாமே. 3

ஆமேநீதுடைவாழை மூட்டுவாழை
அடைவானகுழிவாழை முதுகுவாழை
சேமேநீபுழுகுவாழை விலாவில்வாழை
செயலானதமர்காயாச் சிலந்தியோடு
ஓமேநீகுரிப்புற்று யோனிப்புற்று
ஒளிவானயிடிப்புற்று கன்னப்புற்று
தாமேநீபல்சிலந்திக் கன்னத்தோசை
சதைவளருங்கண்ணோசை போகும்பாரே. 4

பாரடாபிளவையொடு பிளவைப்பூச்சி
பண்டானராஜனென்ற பிளவையோடு
கூரடாநேத்திரமேல் பிளவையோடு
கொடிதானதுடிசிலந்தி புடைசிலந்தி
தேரடாபவுத்திரங்கள் முளைமூலங்கள்
நெடியபதமெட்டுசேக் கரத்திலேடு
வீரடாயிவையெல்லாந் திருந்திரும்
விதமாகபோகருட செயலால்தானே. 5

சகலவிஷங்கள் பேய்பில்லி சூனியம் இவைகட்கு.

விஷமுஷ்டித்தைலம்.

யோமழிஞ்சி	சங்கங்குப்பி
எட்டி	கடம்பு
சங்கு	சிறுகின்னி
வன்னி	வெள்ளறுகு
புங்கு	ஆவிப்பட்டை
செண்பகப்பூ	மருக்காரை
இண்டன்	குண்டுமணிவேர்
கொத்தான்	ஆவாரை
நாயுருவி	சிவன்வேம்பு
பூனைகாஞ்சோரி	முள்ளி
புரசை	கருங்காலி
திருவை	வாகை
புனல்யிண்டு	கருவூமத்தை
அமுக்கரா	விடத்தேறு
பூவரசு	குட்டிப்பலா
குமரி	மிளகரணை
கொன்றை	ஆத்தி
கழற்கொடி	செங்கத்தாரி
பெருமரப்பூண்டு	அவுரி

இவைகளை சமஎடையாயெடுத்து நிழலில் உலர்த்தி ஒன்றிரண்டாயிடித்து குழித்தயிலம் யிறக்கி வைத்துக் கொண்டு உடனே,

கழுகு	கழுதைமண்டையோடு
ஆமை	யெருமைக்கொம்பு
ஆந்தை	குதிரைக்குளம்பு
பச்சைஓணான்	ஆனைலத்தி
தேவாங்கு	ஒட்டைலத்தி
பச்சைதவளை	பன்றிலத்தி

பெருவிரியன் கழுதைலத்தி
மனிதர்மண்டையோடு வெள்ளாட்டுப்புழுக்கை

இவைகளை சமனிடைகொண்டு யிடித்து உலர்த்தி குழித்த யிலம் யிரக்கிவைத்து இதில் அறைப்படியும் ஷெ தயிலத்தில் அறைப்படியும் ஆக ஒருபடிதயிலமும் ஒன்றாய்வார்த்து (மேல்மூடி) சூரியபுடமாக வைத்து எட்டிக்கொட்டையை குழித்தயிலம்வைத்து அறைப்படியெடுத்து மேல்கலந்து வைத்த தயிலத்துடன்வார்த்து நன்றாய் வாய்புரத்திற்கு கார்க்கடைத்து ரவியில்வைத்துவிட்டு,

கருங்குங்கிலியம் கஸ்தூரிமஞ்சள்
கருஞ்சீரகம் மாசிக்காய்
இரசகற்பூரம் இவ்வைந்தும் வகைக்குப்பலம் (க)

பரங்கிப் பட்டை பிரப்பங்கிழங்கு இவ்விரண்டும் வகைக்குப்பலம் (உ) வலம்புரிக்காய் கடுக்காய் வகைக்குப் பலம் (க) ஓதியம்பட்டைச்சாறு சித்திரமூலச்சாறு இரண்டும்கலந்துக்கொண்டு இதைவிட்டு ஷெ கடைசரக்குகளை அறைத்துமுன் யிரக்கிவைத்திருக்கும் குழித்தயிலத்துடன் கலந்துவைத்துக்கொண்டு அத்துடன் மயிலெண்ணை அறைப்படி வேப்பெண்ணெய் (ஹ) படிகலந்து அடுப்பேற்றி தயிலபதமாயும்குருவனுக்கிரகத்தாலும் கைமுறை செய்முறையோடும் தெரிந்துக்காய்ச்சி யிரக்கிவைத்துக்கொண்டு திரேகத்தின்மீது துவளைவிடத்தீரும் வியாதிகளாவன.

பழமையாகிய கால்முடக்கு கைமுடக்குதீராதசூலைகுட்டம் குரைநோய் புடையன் விரியன் செய்யான் செவ்வெட்டை மரவட்டை சகலவித வண்டுகடி பில்லி சூனிய வேதை வைப்பு பிசாசு பூததுடர் வேதாளபார்வை பிரமராட்சதி சந்திப்பு இவைதீரும் மற்றுநாள் வேதுதண்ணீர்விடவும் கைப்பு புளிப்புதள்ளவும் உப்புசுட்டு கூட்டவும் பாசிப்பயர் முருங்கைப்பிஞ்சு முழுத்துவரை ஆவின்பால் இவையாகும் வியாதியும் தேகமும் முதலாகிய சகலபலமும் தெரிந்து பத்தியம் வைக்கவும்.

பதினெண்மர் துணையுண்டாகவும்.

சகலவலிப்புகட்கும்

சோதிரிஷித்தைலம்.

அவுரிவேர்	குட்டிகுமிழ்வேர்
முன்னைவேர்	குட்டிக்களாவேர்
அழிஞ்சிவேர்	பெருங்குதம்பைவேர்
சிவனார்வேம்பின்வேர்	முருங்கைவேர்
சிறுபுள்ளடிவேர்	முளகருணைவேர்
சங்கம்வேர்	முக்காவேளைவேர்
செங்கத்தாரிவேர்	பாவெட்டைவேர்
வாகைவேர்	ஆதொண்டைவேர்
புங்கன்வேர்	வெட்பாலைவேர்
நொச்சிவேர்	எருக்கன்வேர்
பூவரசம்வேர்	கண்டங்கத்திரிவேர்
கொடிவேலிவேர்	தூதுளைவேர்
சத்திசாரணைவேர்	கூத்தன்குதம்பைவேர்
வெட்பாலைவேர்	ஓரிலைதாமரைவேர்
உத்தாமணிவேர்	நன்னாரிவேர்
எலியாலம்வேர்	முருக்கம்வேர்
குட்டிவிளாவேர்	

இந்த வேர்வகைகள் முப்பத்தி மூன்றும் வகைக்கு ஒரு விராகனிடையாக நிருத்தெடுத்து நிழலில் உலர்த்தி ஒரு அங்குலம் இரண்டங்குலம் அளவாகநறுக்கி பாண்டத்தில் வைத்துக்கொண்டு,

நற்பாகல்சார்	பூங்கம்யிலைச்சார்
நாய்ப்பாகல்சார்	முடக்கத்தான்சார்
ஆடாதோடைச்சார்	காட்டுக்குரிஞ்சான்சார்
சிறுசின்னிச்சார்	மாவிலிங்கஞ்சார்
எருக்கிலைச்சார்	எலுமிச்சம்பழச்சார்

இந்த சார்வகைகள் பத்தும் வகைக்கு கால்படியாக யெடுத்து வெவ்வேறு பாண்டங்களில்வைத்து ரவியில்வைத்து,

கருஞ்சீரகம்	சதகுப்பி
கஸ்தூரி	சித்தரத்தை
பூதகரப்பான்பட்டை	பேரரத்தை
தஞ்சனைகர்சிட்டம்	செண்பகப்பூ
பெருங்காயம்	திப்பிலி
ஜாதிக்காய்	வாய்விளங்கம்
மஞ்சள்	கடுக்காய்த்தோல்
மரமஞ்சள்	செவியம்
குக்கில்	சிறுதேக்கு
அரப்பொடி	கடுகுரோகணி

இவைகள் வகைக்கி விராகனிடை (௬)

வசம்பு விராகனிடை (௰) உள்ளி விராகனிடை (௰) வலம்புரிக்காய் விராகனிடை (௰௬) இந்த பதினாறு தினுசு களையும் கல்லுரலில்போட்டு யிடித்து வஸ்திரகாயம் செய்து முதலில் நருக்கிவைத்திருக்கும் காட்டு வேர்கள் யாவும் பாண்டத்தில் போட்டு இரண்டுபடிகியாழம்வைத்து (உ) படி கியாழ மாகக் குருகக்காச்சி வடித்து வஸ்திரகாயம்செய்திருக்கும்கடைசரக்கை கல்வத்திலிட்டுஇந்தகியாழத்தில் அறைக்கவும்கியாழம் மிச்சமானால் ஆரவைத்து ஆரவைத்து அறைத்தபிறகுமுன்பிழிந்துவைத்திருக்கும்பத்துவகை சார்களையும்லவ்வொன்றாய் விட்டு அறைத்து உடனே,

பசுங்கோமியம்	படி-வ
எருமைக்கோமியம்	படி-வ
வெள்ளாட்டுக்கோமியம்	படி-வ
சிறுபிள்ளைகள்மூத்திரம்	படி-வ

இந்த நான்குவகை நீரும்விட்டு அறைத்து சாணிப் பதமானபிறகு அத்துடன் விளக்கெண்ணை கால்படி வேப்பெண்ணை கால்படி இவ்விரண்டும்ஊற்றி குழம்புபதமாய்க்கலந்து அடுப்பிலேற்றும்போது,

வவ்வால்	இரண்டு
கள்ளிக்காக்காய்	ஒன்று
பெருவோணான்	ஒன்று

முயல்	ஒன்று
சிற்றேருணன்	மூன்று
உடும்பு	ஒன்று
நல்லபாம்பின்கண்டம்	ஒன்று
பச்சைமயில் இரகு	ஐந்து

இவைகள் ஒவ்வொன்றையும் அறுத்து உதிரத்தை ஷை எண்ணெய் பாண்டத்தில் பிடித்துக் கொண்டு இரகு தோல் குடல் இவைகளை நீக்கி இரச்சியையும் அத்துடன் போட்டு அடுப்பேற்றி யெரித்து இரக்கிவைத்துவிட்டு மருநாள் அடுப்பிலேற்றி யெரித்து இரச்சிகள் யாவும் யெடுத்து தயிலத்தை மாத்திரம் பிழிந்துக்கொண்டு இரச்சித் துண்டுகளை யெரிந்துவிட்டு எண்ணெயை வேறு சீசாவில் வடித்து வைத்துக் கொண்டு ஒரு துளிமுதல் ஒருகாசுயிடைவரையில் கொடுக்கவும், தலைமுதல் தேகம்முழுவதும் தேய்த்து துவளையிலிடவும்தேகவலிவு வியாதிகளின் நோக்கம் இவையுணர்ந்து உள்ளுக்குக் கொடுப்பதும் சர்வாங்க துவாளையிடுவதும் பண்டிதர்களுடையபக்குவமாகும்.

இதற்கு தீரும் வியாதிகள்.

கோணைவலிப்பு, குமரகண்டவலிப்பு, பிரவலிப்பு, காக்கைவலிப்பு, ஜன்னிவலிப்பு, ரணவலிப்பு, முகவாதவலிப்பு,முகஜன்னிவலிப்பு,முயல்வாதம்,பாரீசவாதம், உச்சிவாதம்,கணுவாதம், வாதமென்று சொல்லப்பட்ட சகலவாதங்களும்,வலிப்பென்றுசொல்லப்பட்ட சகலவலிப்புகளும், ஜன்னியென்று சொல்லப்பட்ட சகலசன்னிகளும் தீரும்.

பத்தியம்.

புகையிலை, புளி, கருவாடு, மீன், இரச்சி, கரப்பான்பண்டம், லாகிரி, பொடி, போகம், இவைநீக்கவும், அன்றியும்நோய்க்கிசைந்தபடி சமயோசித பத்தியம் வைப்பது வயித்தியரனுபவமாகும்.

சற்குருதுணையுண்டாகவும்.

லகுயிடிவல்லாதி.

செங்கொட்டை	பலம் -	ய
எள்ளு	,,	ய
கொப்பரைதேங்காய்	,,	உ
பரங்கிப்பட்டை	,,	உ
அமுக்கனுங்கிழங்கு	,,	உ
சித்திரமூலம்	,,	உ
கஸ்தூரிமஞ்சள்	,,	உ
கருஞ்சீரகம்	,,	உ
வாலுழுவை	,,	உ
குராசாணி	,,	உ
வெற்றிலைக்காம்பு	,,	உ
கடுக்காய்தோல்	,,	உ
திப்பிலி	,,	உ
கோஷ்டம்	,,	உ

முதலில் சொல்லியிருக்கும் செங்கொட்டை பத்து பலத்தையும் ஒவ்வொரு கொட்டைகளின் மூக்கைவெட்டிசாணிப்பாலில்போட்டு மேல்மூடி மூன்றுநாள் ஊரவைத்து எடுத்து ஜெலத்தில் அலம்பி விட்டு பிறகு இளநீரினால் அலம்பியெடுத்து கல்லுரலில்போட்டு எள்ளு-ய, பலத்தையும் அம்மியில்வைத்து அரைத்து கொப்பரைதேங்காயையும் அம்மியில் அரைத்து இந்தயிரண்டுமுத்தையையும் உரலில்யிருக்கும்செங்கொட்டையுடன்போட்டு கெட்டப் பாறையினால் மூன்றுநாள் யிடிக்கவும் மைபோல் ஆகுமளவும் யிடிக்கவேண்டியது அப்படி மெழுகுபதமாய் யிடித்தானபிறகு பரிங்கிச்செக்கை முதலாய் கோஷ்டம்வரையில் உள்ள யக, தினுசுகளில் வெற்றிலைக்காம்பு தவிர மற்றதுகளை வேரேவுரலில் யிடித்து வஸ்திரகாயம்செய்து முன்பு கல்லுரலிலிருக்கும் மருந்துடன் போட்டு ஒருநாள்யிடித்து வழித்துவைத்துக்கொள்ளவும்வெற்றிலைக்காம்பை எள்ளரைக்கும்போது கூடப்போட் டரைத்துக் கொள்ளவேண்டியது. இம்மருந்தை இடிக்க வேண்டிய மனி

தன் காலையில்பெருமைத் தயிறுசேர்ந்த பழையதுவயறுகிரம்பப்புசித்து யிடிக்கத் துவக்கவேண்டும் யிடிக்கும்போது நிதமொருக்கொப்பரை தேங்காய் தின்னவேண்டும் யிடித்துமுடிவானபிறகு விளக்கெண்ணெய் தலைக்குத்தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும்.

இதனால் தீரும்வியாதிகள்.

தானென்றவல்லாதி அந்திசந்தி
தயவாகமண்டலந்தான் கொண்டாயானல்
வானென்றகுட்டமொடு கிரந்திசூலை
வகையான்அறையாப்பு மேகமெல்லாம்
கோனென்றகுன்மமெட்டு சுக்கிலவாய்வு
குணமில்லாரிணம்புரைகள் கிரந்திதீரும்
ஏனென்றபத்தியந்தா நிச்சாபத்தியம்
இதமானஉப்புமுதல் வருத்துக்கூட்டே. 1

கூட்டப்பாதயிர்மோரும் நெய்யுமாகும்
குணமானதுவரையுட பருப்புமாகும்
நாட்டப்பாபாசியென்ற பயருமாகும்
நலமானநல்லாரைப் பொன்னங்கண்ணி
ஆட்டப்பாமச்சமென்ற தெல்லாந்தள்ளு
அடைவாகமற்றதெல்லா மாகும்பாறு
ஆட்டப்பாவிளக்கெண்ணே தேய்த்துமூழ்கு
அடைவாகசுந்திரம்போல் தேகமாமே, 2

நாலுநாளைக் கொருதகுதி விளக்கெண்ணெயில்தலைமுழுகிவரவேண்டியது முழுகும்நாளில் மட்டும் மருந்துண்ணப்படாது, க்ஷவரம்செய்துக் கொள்ளும் தினத்திலும் மருந்துண்ணப்படாது, புகை சுருட்டும் லாகிரிவஸ்துவும் எப்போதும் கூடாது, இந்தமருந்தை புசிக்கும் நாள் துடங்கி மருந்துவிட்டபிறகு தொண்ணூறுநாள்வரையிலும் ஸ்ரீசம்மந்தம்கூடாது வேளைக்கு ஒருசுண்டக்காயளவு சாப்பிடவேண்டும்,

குருதுணைவுண்டாகவும்.

21-மேகத்திற்கும் சித்திரபல்லாதி.

பால்வுள்ள செங்கொட்டைகளாக (ா) கொட்டைகொண்டுவந்து குழித்தயிலம்யிரக்கி மூன்றறைபலம் தயிலம் நிருத்துயெடுத்து வைத்துக்கொண்டு எள்ளு (நு) பலங்கொண்டுவந்து ஜெலத்தில் ஊரவைத்து பிசைந்து மேற்றோல் போக்கி உலர்த்தி கல்லுரலில்போட்டு நன்ருய் யிடித்த பிறகு அத்துடன் நல்லவெல்லம் (நு) பலம்போட்டுயிடித்து பின்பு கெந்திபலம் (உ) சூதம்பலம் (க) இவ்விரண்டும் கல்வத்தில்போட்டு அரைத்து நன்ருய்மடிந்தபிறகு யெடுத்து உரலில் யிருக்கும் மருந்துடன்போட்டு முன் எடுத்துவைத்திருக்கும் குழித்தயிலம் ௩೨, பலத்தையும் மருந்துடன்விட்டு ஒருநாள் முழுதும் யிடித்து மெழுகுபோல் ஆனபிறகு யெடுத்து பீங்கான் கோப்பையில் வைத்துக்கொள்ளவும்.

ஒருவேளைக்கு மணிப்புங்கன்விரைப் பிரமாணமாககாலை மாலை இருவேளையும் ௰க, நாள்சாப்பிடவும் யாதொரு பத்தியமும்கிடையாது கடுகு நல்லெண்ணை யாவற்றும் ஆகும் அல்லது இச்சாபத்தியமிருக்கலாம் தயிர் மோர் நெய், ஆட்டிரைச்சி விசேஷமாய் புசிக்கலாம்.

தீரும்வியாதிகள்.

கண்டமாலை, கொருக்கு, லிங்கப்புற்றும், யோனிப்புற்றுரிணங்கள், கிரந்தி, மேகப்படை, குட்டத்தடிப்பு, ஆசனப்பவுத்திரம், கொடிபவுத்திரம், மூலம், சீழ்மூலம், (உக) விதமேகமும் தீரும். மறுபத்தியம் (௰க) நாள் ஆனபிரகு நல்லெண்ணெய்தேய்த்து தலைமுழுகலாம், ஒருசமயம்திரேகம்நமைச்சல்கண்டாலும் ஊதலாலுலும் இரண்டுகப்பத்தேங்காயைத்திரிகி பால்யெடுத்து அந்த பாலில் (உ) எலுமிச்சம்பழம்பிழிந்து சிரசுமுதல் திரேகமெல்லாம் பூசி நன்ருய்த் தேய்த்துக்கொண்டு வென்னீரில் குளிக்கவும்,

குருதுணையுண்டாகவும்.

பெருமருந்து வகைபரணி

முற்றிற்று.

தேவிசகாயம்.

ஐந்தாவது

மாத்திரைவகைபாலி.

பாலசஞ்சீவிக்குளிகை.

சுக்கு	லிங்கம்
திப்பிலி	வெண்காரம்
மிளகு	கிராம்பு
ஓமம்	வகைக்குவிராகனிடை (க)

இந்த ஏழுவகையும் யிடித்து வஸ்திரகாயம்செய்து கல்வத்திலிட்டு யெலிமிச்சம்பழச்சார்விட்டு மூன்றுஜாம மறைத்து உளுந்தளவு மாத்திரைகள்செய்து நிழலில் உலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும்.

குழந்தைகள் சுரத்திற்கு துளசி அல்லது நாய்த்துளசி பிட்டவியல்செய்து பிழிந்தசாற்றில் குழந்தை வயதுக்கு தக்கினபடி (க) அல்லது உ, மாத்திரையிழைத்துக்கொடுக்கவும் தாய் இச்சாபத்தியம் இருக்கவும் சன்னிசுரமானால்முலைப்பாலில் கொடுக்கவும், பெரியவர்களுக்கு ஜலதோஷம் தலைபாரம் கண்டால் ஒருமாத்திரை வெற்றிலையில் வைத்து மடித்துத் தின்னவும் ஷை சுரங்களுக்கு அந்தி சந்தியாக மூன்று நாள் கொடுக்கவும்.

பாலபேதிக்குளிகை.

ஜாதிக்காய்	திப்பிலி
ஓமம்	கஸ்தூரிமஞ்சள்
கிராம்பு	சுட்டவசம்பு
கருஞ்சீரகம்	காயம்வகைக்கு விராக னிடை-க
சுக்கு	வெள்ளைகாக்கணம்வேர் ,, கூ

இவைகளை யிடித்து வஸ்திரகாயம்செய்து கல்வத்திலிட்டு வெந்நீர்விட்டு ௩, ஜாமம்அரைத்து மிளகு, கடலை, சிறுசுண்டை இந்த அளவுகளாக உருட்டி நிழலில் உலர்த்திவைத்துக்கொண்டு குழந்தைகளின்வயதும் திடமும்பார்த்து வெந்நீரில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்கவும் இப்படி-எ, நாள் கொடுக்க மூன்றுநாளுவிசை வயறுபோகும் பால்குடிக்கும் சிறுகுழந்தையாகில் தாயார் பத்தியமிருக்கவும் வெந்நீரின்சாதம் உப்பில்லாமலே தின்னவேண்டும் அல்லது சங்கம் பிலையில் சுட்டு பஸ்பமான உப்புசேர்த்து முழுத்துவரையை வருத்துடைத்த பருப்பு துவையலாகும்.

தீரும்வியாதிகள்.

சளியிருமல், சுழிகணம், விச்சுழி, அள்ளு, சன்னிதோஷம், மந்தம், வயருநோய், பொருமல், இரச்சல், கொருகொருப்பு, சுரம், இவைதீரும்.

மகாசுராங்கிசக்குளிகை.

ரசம்	விராகநிடை-க	சுக்கு	விராகநிடை-உ
கெந்தி	,, க	திப்பிலி	,, உ
நாபி	,, க	மிளகு	,, உ
ஊமத்தன்விரை	,, ௩		

இவைகளை கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சார் விட்டு மூன்று ஜாமம்அரைத்து குண்டுமணியளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும் இந்தமருந்தை தகுந்த அனுபானங்களுடன் பிரயோகித்தால் தினசுரம், இருமுறைசுரம்.மும்முறைசுரம்,நாலாமுறைசுரம்,சகலகாச்சலும்தீரும்,

சூலை குடாரம்.

ரசம்	நெல்லிமுள்ளி
நாபி	சுக்கு
வெண்காரம்	மிளகு
கெந்தகம்	திப்பிலி
கடுக்காய்	அரிதாரம்
தான்றிக்காய்	தாம்பிரபஸ்பம்
நேர்வாளம்	வாய்விளங்கம்

இவை சமன்கொண்டு கையாந்தகரைச் சாறுவிட்டு (௩) ஜாமம் அரைத்து குண்டுமணியளவு உருட்டி மிளகுகியாழத்தில் திடமரிந்து ஒன்றிரண்டு உபயோகித்தால் சூலைகள் குன்மங்கள் தீரும்.

சுரநாதக்குளிகை.

அரிதாரம்	பலம்	௪
துருசு	,,	௩

இவ்விரண்டும் பாகயிலைச்சாற்றால் மூன்றுநாள் அரைத்து உளுந்தளவு மாத்திரைசெய்து நிழலில் உலர்த்திக் கொண்டு இஞ்சிரசத்தில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்கசீதசுரம்தீரும் காலை ஒரேவேளை உபயோகிக்கவும்.

சீதசுரக்குளிகை.

வெள்ளைபாஷாணம்	பலம்	௧
ஜாதிலிங்கம்	,,	௨

பசும்மோரைத் தெளியவைத்து அதில்கீழேநிற்கிற வண்டல் பலம்-௩, எடுத்து அந்தமருந்தில்போட்டு ஒருநாள்முழுதும் அரைத்து பச்சைப்பயரளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திக்கொண்டு மோரில்ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்கவும், குளிர்சுரம் சொஸ்தமாகும்.

வாலசஞ்சீவி.

நர்விதிப்பிலிவெண்காரம் நல்லக்காசெடைமூவைந்து
மேவும்ஜாதிலிங்கமது வீசுங்காசெடைபத்தாகும்
தாவுநிம்பழத்தின்சாற்றில் சுகமாயரைத்து ஒருஜாமம்
காவியங்கயற்கண்ணே கடலைநிரைபோலுருண்டைசெய்யே

இதுவுமது.

சுக்குநீர்தன்னிற்கொள்ள சுகமுடன்வெதுப்புதீரும்
தக்கசீரகங்கிராம்பு தனிலிடதாகந்தீரும்
பக்காலின்விழிதிற்கொள்ள * பண்டையின்சுரங்கடீரும்
மைக்கண்ணைக்குளிகையின்பேர் வாலசஞ்சீவியாமே.

* பண்டை-பழயசுரம்.

பாலவிரோசனக்குளிகை.

திப்பிலி	களஞ்சி-உ	கடுகுரோகணி	களஞ்சி-உ
மிளகு	,, உ	தேசாவரம்	,, உ
சுக்கு	,, உ	வாய்விளங்கம்	,, உ

இவை யாவும் பிடித்து வஸ்திரகாயம் செய்து கல்வத்திலிட்டு சுத்திசெய்தவாளம், களஞ்சி (யஉ௬) ஷை மருந்துடன் போட்டு எலுமிச்சம் பழச்சார்விட்டு இரண்டு ஜாமம் அரைத்து குண்டுமணிப்பிரமாணம் உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும், பிள்ளைகளுக்கு நிலாவிரை கியாழத்திலாவது சுக்கு கியாழத்திலாவது (க) அல்லது (உ) மாத்திரை இழைத்துக் கொடுக்கவும் நன்றாய் விரோசனமாகும் மாந்தம் வாய்வு சுரம் இவைதீரும்.

சர்வமாந்தக்குளிகை.

வாளம்	விராகநிடை	அ
சுக்கு	,,	எ
மிளகு	,,	சா
கெந்தி	,,	உ
வெண்காரம்	,,	உ
ரசம்	,,	உ
கடுகுரோகணி	,,	உ

இவைகளை யிலைக்கள்ளிச்சார் விட்டு அரைத்து மிளகளவு மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும் சுக்குகியாழத்திலிட சுரந்தீரும் வாழைப்பழத்தில் கொடுக்க பேதியாகும், நொச்சி ஆடாதோடை துளசி இதுகள் பிட்டிட்டு சார்பிழிந்து அந்தச்சாற்றில் (க) மாத்திரை யிழைத்துக்கொடுக்க சகலமாந்தமும் கண்டிக்கும்.

சஞ்சீவிக்குளிகை.

நாபி	களஞ்சி	க	சுக்கு	களஞ்சி	க
கருநாபி	,,	க	தாணிக்காய்	,,	க
தாரம்	,,	க	மிளகு	,,	க
இரசம்	,,	க	திப்பிலி	,,	க
வெண்காரம்	,,	க	வாளம்	,,	ரு

இவைகளை கல்வத்திலிட்டு கையாந்தகரைச் சார்விட்டு ஒரு ஜாமம் அரைத்துநிருத்தவும் இப்படி ஒருநாளைக் கொருஜாமமாக எழுநாள் அரைத்து குண்டுமணி யளவு மாத்திரைசெய்து நிழலில்உலர்த்தி வைத்துக்கொள்ளவும், மாந்தம் மாந்த வலிப்பு குன்மம் இதுகட்கு நொச்சிலி சாற்றிலிடத்தீரும், மூலவாய்க்கு ஜாதிக்காய் பொடியில் ஒருமாத்திரைவைத்து முலைப்பால்விட்டு யிழைத்துக்கொடுக்கவும், சூலைவாய்வு சர்வாங்கதவாதம் இவைகட்கு முருங்கப்பட்டை சாற்றிலிடவும் பாம்புகடிக்கு பழச்சாற்றிலிடவும் திரும்.

கபாடமாத்திரை.

ஜாதிக்காய், ஜாபத்திரி, சீரகம், அதிவிடயம், லவுங்கம், அபினி, வன்னிகெருப்பம், வெந்தியம், களச்சிவித்து, குரோசானி ஓமம் வகைக்கு விராகநிடை (வ) கெஞ்சா சாறுவிட்டு அரைத்து வெந்தயப் பிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும், தயிரிலாவது தேனிலாவது வாழைப்பூசாற்றிலாவது மூன்றுநாள் யிருவேளையும் கொடுக்கரத்தமூலம், கிராணி, ஜலக்கிராணி, வாய்வுக்கிராணி, சுழிக் கிராணி, நீர்தாரைக்கிராணி, பாண்டுக்கிராணி, அதிசாரக்கிராணி, யாவும்திரும்.

குழந்தைகள் சுரமாத்திரை.

லவுங்கம், சுக்கு, மிளகு, ஓமம், வெண்காரம், லிங்கம், குங்குமப்பூ வகைக்கு விராகநிடை - க. பழச்சாற்றாலரைத்து உளுந்தளவுமாத்திரைசெய்து துளசி, நாய்துளசி, முலைப்பால் இதுகளில்கொடுக்கவும், ஜன்னிசுரதோஷம் இவைகள் தீரும் பெரியவர்கள் இரண்டுமாத்திரையை ஒருவெற்றிலையில்வைத்துமடித்துத் தின்னவும், ஜலுப்பு, சீதளம், தலைபாரம் சுரம் இதுகள்திரும்.

சிகப்புமாத்திரை.

சுக்கு	அக்கிராகாரம்
திப்பிலி	கோஷ்டம்
மிளகு	வெண்காரம்
லவுங்கம்	லிங்கம்
வால்மிளகு	வகைக்கு விராகநிடை (க)

இவைகளை இஞ்சிச்சார்விட்டு இரண்டுஜாமம் அறைத்து துவரையளவு மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும் சகலவியாதிகள் சுரம் யாவற்றிற்கும் கொடுக்க லாம்.

அமுர்தசஞ்சீவிக் குளிகை.

கஸ்தூரி	பச்சைகற்பூரம்
குங்குமப்பூ	மிளகு
கோரோசனம்	சன்னராஷ்டகம்
செண்பகப்பூ	பளிங்குசாம்ராணி

இவைகள் சமநிடைகொண்டு கல்வத்திலிட்டு இஞ்சிச்சாற்றில் ஒருஜாமம் முலைப்பாலில் ஒருஜாமமறைத்து பயறுபோலுருட்டி நிழலில் உலர்த்திவைத்துக் கொள்ளவும் வெற்றிலையில் ஒருமாத்திரைவைத்து மடித்து தின்ன ஜலதோஷம் சுரதோஷம் சன்னி யாவும் தீரும்.

லட்சுமீ நாராயணக் குளிகை.

கெந்தகம், துருசு, சீனகாரம், அரிதாரம், இவைசமனிடைசேர்த்து சாரணைவேர் கியாழத்தால் (௩) சாமமரைத்து அதேகியாழத்தில் தொளாந்திரமாகக்கட்டி ஒருஜாமம் யெரித்து ஆரினபிறகுயெடுத்து அறைத்து குன்றியளவுமாத்திரைசெய்து அனுபானமறிந்து கொடுக்க வாதசுரம், பித்தசுரம், சிலேட்டுமசுரம், விஷசுரம், சன்னிபாதசுரம் சகலமும் அனுகூலமாகும்.

கஸ்தூரிமாத்திரை.

கஸ்தூரி	ஜாபத்திரி
குங்குமப்பூ	தாளிசப்பத்திரி
பச்சைகற்பூரம்	வால்மிளகு
செஞ்சந்தணம்	தக்கோலம்
ஏலம்	கிராம்பு

இவைகளை வகைக்கு விராகனிடை-க, எடுத்து இடித்து வஸ்திரகாயம்செய்து செவ்விளநீர்விட்டரைத்து பயருபிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்திவைத்துக் கொள்ளவும் குழந்தைகள்முதல் உபயோகப்படுத்தலாம்.

குங்குமப்பூ குளிகை.

குங்குமப்பூ	ஓமம்
பச்சைகற்பூரம்	அதிவிடையம்

அக்கிராகாரம்
மராட்டிமொக்கு
ஏலரிசி
லவுங்கப்பட்டை
குராசானிஓமம்
கருஞ்சீரகம்

இவைகள் வகைக்குவிராகநிடை (க) எடுத்து ஆவாரை வேரின் கியாழத்தாலரைத்து பயரளவுகுளிகைசெய்து நிழலி லுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

சகலரோகத்திற்கும்
கோடாசுழிக்குளிகை.

சுக்கு
திப்பிலி
மிளகு
கடுக்காய்தோல்
தாணிக்காய்
நெல்லிப்பருப்பு
நாவி
நிருவிஷம்
இரசம்
கெந்தகம்
வெண்காரம்
நேர்வாளம்

நேர்வாளத்தை மாத்திரம் கிறமப்படி சுத்திசெய்து (உ) விராகநிடையெடுத்துக்கொண்டுமற்றபதினொருசரக்கும்வகைக்கு ஒரு விராகநிடையாக வெடுத்து கரசனாங்கண்ணிச் சாற்றால் ஒருஜாமம் அரைத்து கலுவத்துடன் அப்படியே வைத்துவிட்டு மறுநாள் உதயத்தில் ஷை சாறுவிட்டு ஒரு ஜாமம் அரைக்கவும் இப்படிநிதம் ஒருஜாமமாக ஏழுநாள் அரைத்த பிறகு குன்றிப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும்.

இதனால் தீரும்வியாதிகள்.

விளக்கெண்ணெயில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்க பேதியாகும், மோரில் (க) அல்லது (உ) மாத்திரைகொடுக்ககிராணிகள் தீரும், இஞ்சிசாற்றில்கொடுக்க செரியாகுணம் தீரும்,
கரசனாங்கண்ணிசாற்றிலிட குளிர்சுரம்தீரும்
ஷை சாற்றிலிட அல்லதுகியாழத்திலிட உடம்புநோய்தீரும்
நொச்சிச்சாற்றிலிட சுக்கிலபிரமியந்தீரும்
பழச்சாற்றிலிட உடம்புவீக்கந்தீரும்
ஜாதிக்காயில்கொடுக்க பேதிகட்டும்
பிரண்டைசாற்றில்கொடுக்க போகம்அதிகரிக்கும்
ஆனைவணங்கிசாற்றிலிட உடம்புயிளைப்புதீரும்

கோரைக்கிழங்குசாற்றில் (க) மண்டலமிட நாள்பட்ட கிராணிதீரும், பாக்கில்கொடுக்க கெற்பமுண்டாகும்
முருங்கப்பட்டைசாற்றிலிட வயற்றுசூலைதீரும்
தயிரில்கொடுக்க அஜீரணம்தீரும்
ஊமத்தைசாற்றிலிட ஜன்னிபாதம்தீரும்
வெள்ளாட்டுப்பாலிலிட செயரோகந்தீரும்
நெல்லிக்காய்சாற்றிலிட உடம்புயெறிவுதீரும்
வெல்லத்திலிட மலக்கட்டுதீரும்
அன்னக்காடியிலிட பித்தந்தீரும்
பொன்னாங்கண்ணிசாற்றிலிட பிள்ளையுண்டாகும்
புளிப்புமாதளம்பழச்சாற்றிலிட பசியுண்டாகும்
கழுநீரிலிட சகலஉஷ்ணமும்தீரும்
கோமூத்திரத்திலிட பித்தம்உடம்புதிமிரும்தீரும்
முள்ளங்கிசாற்றிலிட மூலந்தீரும்
இலவம்பட்டைசாற்றிலிட விக்கல்தீரும்
வெள்ளிலைசாற்றிலிட கண்படலம்தீரும்
சிறுநீரிலிட ஐந்துவகைகுன்மம்தீரும்
ஜாதிக்காயிலிட மூலக்கிறுணிதீரும்
மிளகுபசும்நெய்யிலரைத்து அதிலிடபாம்புவிஷம்தீரும்
வசம்பில்கொடுக்க வாய்வுதீரும்
சுக்கில்கொடுக்க இரைப்புகடுப்புதீரும்
சீரகப்பொடியும் சக்கரையும் கலந்து அதிற்கொடுக்க சகலசுரமும் உஷ்ணமும்தீரும் குளிர்ச்சிதரும்
அலரியிலையில் நசியமிடவெறிதீரும்
காடியிலிழைத்துப்பூச சந்துவாதம்தீரும்
செண்பகமொக்கில் அறைத்துப்பூச வாதம்தீரும்
பழச்சாற்றிலிட பாம்புவிஷம்தீரும்

இந்தகுளிகையை தினம் மூன்றுஉருண்டையாக இடைவிடாமல் மூன்றுவருஷகாலம் தின்று வந்தால் திரேகம் வச்சிரகாயமாகுமென்று இந்த முறைதந்தவர் சொல்லுகிறார் அன்றியும் வயித்தியர்கள் கையாடும் பக்குவத்தினால் எல்லாவியாதிகட்கும் இந்த ஒருவிதமருந்தையே உபயோகிக்கலா மென்றும் தெரிவிக்குறார்.

பூரமாத்திரை.

இரசகற்பூரம்	விராகனிடை-	௰	மிளகு	விராகனிடை -	௨
வெண்காரம்	,,	௨௫	திப்பிலி	,,	௨
பச்சைகற்பூரம்	,,	க	கருஞ்சீரகம்	,,	க
வாய்விளங்கம்	,,	௨	மோடி	,,	௨
லவுங்கம்	,,	க	ஏலரிசி	,,	க
சுக்கு	,,	௨	வாளம்	,,	சு

இவைகளில்சூரணிப்பதை சூரணித்துக்கொண்டு யாவும் கல்வத்திலிட்டு சுக்கு கியாழத்தால் ஒருஜாம மறைத்து குன்றியளவுமாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும் அந்திசந்தி இருவேளையும் பத்துநாளுண்ணவும்இச்சாபத்தியம்.

மதுரமாத்திரை.

அதிமதுரம் — மாதளம்பூ
ஜாதிக்காய் — சீரகம்
அதிவிடையம் — அக்கிராகாரம்

இவைகளை நிமநிடைகொண்டு பொன்வருப்பாய்வருத்து யிடித்து சூரணித்து புளியாவாரைச் சாற்றலாட்டிமிளகளவு குளிகைசெய்து நிழலில்உலர்த்திவைத்துக் கொண்டு தேனில் சக்கரையில் (க) மாத்திரை கொடுக்கவும் வெப்புக் கழிச்சல் தீரும் இச்சாபத்தியம்.

சுரயேலாதிக்குளிகை.

ஏலம் — சீரகம்
கோஷ்டம் — கருஞ்சீரகம்
திப்பிலி — அக்கிராகாரம்
மாசிக்காய் — பேய்ப்புடல்
மாஞ்சில் — கோரோசனை

இவைகள்வகைக்குவிராகநிடை-௨௫, யாகவாங்கி பொன்வருப்பாய்வருத்து யிடித்துச் சூரணித்து முலைப்பால் விட்டு இரண்டுஜாமம் அறைத்து கடலைப்பிரமாணம் மாத்திரை செய்து வைத்துக்கொண்டு முலைப்பாலில்தானேயிழைத்துக்கொடுக்க கணக்காச்சல் உட்சுரம் இவைதீரும் இச்சாபத்தியம்.

மாத்திரைவகைபரணி

முற்றிற்று.

உ

தேவிசகாயம்.

ஆருவது

எண்ணெய் வகைபரணி.

சர்வரோகத்திற்கும்

பொதுயெண்ணெய்.

ஜாதிக்காய்
ஜாபத்திரி
ஏலம்
கோஷ்டம்
அதிவிடையம்
குங்குமப்பூ
அதிமதுரம்
சித்திரமூலம்
சுக்கு
செவியம்
பேராத்தை
சித்தரத்தை
கடுக்காய்
தாணிக்காய்
மாசிக்காய்
சீரகம்
வால்மிளகு
குராசானிஓமம்
சதகுப்பி
வசம்பு
ஓமம்

கடைசியில் கூரிய ஓமம் (ரு) விராகனிடை வசம்பு (சு) விராகனிடை யெடுத்துக்கொண்டுமெற்றசரக்குகள்யாவும் வகைக்கு இரண்டு விராகனிடையாக யெடுத்து உலர்த்தி யிடித்து வஸ்திரகாயம்செய்து வைத்துக்கொண்டு வசம்பைசுட்டுசாம்பலாக்கி சேர்க்கவும்.

ஈயத்தண்டு
பழம்பாசியிலை
நுணயிலை
புங்கன் யிலை
சங்கன்யிலை
கழற்சியிலை
குதிரைவாலி
தபசுமுருங்கை
நாவற்கொழுந்து
கொட்டைக்கரந்தை
சிறுபுள்ளடி
துளசி
தும்பை
பொடுதலை

கண்டங்கத்திரி	வேளை
செருப்படை	வரட்பூலா
கோழியாவாரை	வெள்ளறுகு
ஆடாதோடை	பருத்தி

இவைகளின் சாறு வகைக்கு அரிக்கால்படியாக வெடுத்து விளக்கெண்ணெய் படி (உ) இவையாவும்ஒன்றாய்க்கலந்து முலைப்பால் ஆழாக்குவிட்டு திருநீற்றுப் பச்சிலைவேரும் கருவேப்பிலையீர்க்கு வகைக்கு ஒவ்வொரு பிடியெடுத்து ஒன்றிரண்டாய் நருக்கிக்கூடப்போட்டு முன்செய்து வைத்திருக்கும் சூரணத்தையும் கொட்டி நன்றாய் கரைத்து ஒருநாள் சூரிய புடம் வைத்து பின்பு அடுப்பேற்றி மெழுகுபதமாய்க் காச்சி வடித்துக்கொண்டு காலையில் உச்சிக்கரண்டி வீதம் கொடுக்கவும் கணம் மாந்தம் சொரிசிரங்கு புண்கள் வாய்வுகள் நீர்மேகம் பிரமேகம் யாவும்தீரும் குழந்தைகள் முதல் பெரியவர்களுக்கும் ஆகும் வியாதியின் திடமும் தேகதிடமும் அறிந்து இச்சாபத்தியம் அல்லது கடும்பத்தியமும் வைக்கலாம்.

கதிர்யெண்ணெய்.

சிறுபுள்ளடியிலைச்சாறு	பொடுதலைச்சாறு
கெச்சக்காய்கொழுந்துச்சாறு	புங்கம்வேர்பட்டைப்பால்
அவுரியிலைச்சாறு	கோரோசனம்

கோரோசனம்-க,விராகனிடை புங்கம்பால்காலணாயிடை மற்றசாறுகள் வகைக்குபலம்-உ, விளக்கெண்ணை கால்படியில் யாவும்விட்டு ஒருநாள் சூரியபுடம்வைத்து மறுநாளடுப்பேற்றிமெழுகுபதமாய் காய்ச்சிவடித்து குழந்தைகளுக்கு துட்டிடைகொடுக்கவும் தாய்பத்திய மிருக்கவேண்டும் மாந்தம் வாய்வு வயருப்பிஷம் இவைதீரும் இச்சாபத்தியம்.

ஷை சூரியபுடயெண்ணெய்.

சிறுபுள்ளடியிலை	அவுரியிலை
கழற்கொழுந்து	பொடுதலையிலை

இன்னான்கும் வகைக்கு ஒருபிடி யெடுத்து பஞ்சுபோல் நருக்கி ஆழாக்கு நல்லெண்ணெயில்போட்டு (ரு) நாள் சூரிய

புடம்வைத்து உள்ளுக்கும் கொடுத்து மேனுக்கும் பூசலாம் கண்மாந்தம்தீரும், இச்சாபத்தியம்.

மண்டைக் குடைச்சலுக்கு எண்ணெய்.

மணித்தக்காளி	கீழாநெல்லி
பொன்னுங்கண்ணி	வில்வயிலை
கரசலாங்கண்ணி	தேள்கொடுக்கிலை

இவைகள் யாவும் சமபாகமாய் கொண்டுவந்து யிடித்து சாறுபிழிந்து அந்தசாற்றுக்கு சமநிடைநல்லெண்ணெய்கூட விட்டு ஒருநாள் சூரியபுடம் வைத்து மறுநாள் அடுப்பேற்றி கடுகுபதமாய் காச்சிவடித்து (௩) நாளைக் கொருமுறை ஸ்நானம்செய்ய வேண்டியது தலைமுழுகினவுடன் கடுக்கா மிளகு நீர் அரை யாழாக்கு குடிக்கவேண்டியது பிரகு போஜனம் செய்யவும் மாமிசம், மச்சம், இவையாகாது பகலில் நித்திரை செய்ய வேண்டியது (நு-கூ) முழுக்கில் மண்டைக்குடைச்சல் தீரும்.

கெணத்தெண்ணெய்.

லவுங்கம்	லவுங்கப்பூ
வெந்தயம்	கோஷ்டம்
கடுக்காப்பூ	சோம்பு
சீரகம்	பூண்டு
ஜாதிபத்திரி	ஜாதிக்காய்

இவைகள் வகைக்கு (கவ) விராகநிடையாக உலர்த்தியிடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு,

கற்றாழை	பொற்றலைக்கையான்
கோவை	பொன்னுங்கண்ணி
புளியாரை	சருள்ளி
கற்பூரவள்ளி	ஓமவள்ளி

இவைகளின்சாறு வகைக்குக் கால்படியாகயெடுத்துசித்தாமணக்கெண்ணை ஒருபடி பசும்பால் அரைப்படி இவைகள் யாவும் ஒன்றாய்கலந்து ஷெ சூரணமும் போட்டு நன்றாய்கலந்து அடுப்பேற்றி மெழுகுபதமாய்காச்சி வடித்துக் கொண்டு ஆரியபிரகு குங்குமப்பூ கோரோஜனம் வகைக்கு விராகநிடை

(உ൦) எடுத்து ஷை எண்ணெயிற்கலந்துக்கொண்டு காலேயில் அரைபலம் அல்லது கால்பலம்வீதமாய் (ய) நாள் கொடுக்கவும் எண்ணெய்கொடுக்கும்போது எண்ணேக்குசமநிடைமுலேப்பால் கலந்து அனலில் காட்டிக்கொடுக்கவும்.

பாலசஞ்சீவி யெண்ணெய்.

பொன்னுங்கண்ணி	குப்பைமேனி
எலிக்காதிலே	அரிவு
குரும்பை	பொடுதலே
முசுமுசுக்கை	ஆடாதோடை
கோவை	வல்லாரை
இம்பூரல்	துளசி
சிறுகீரை	குதிரைவாலி
கோழியாவாரை	தூதுவேளை
கொன்றை	தகரையிலே
விஷ்ணுகாந்தி	கரசனுங்கண்ணி
ஓரிதழ்தாமரை	முருங்கையிலே
நருவிலியிலே	முருங்கப்பட்டை
இண்டு	ஈருள்ளி

இவைகளே வகைக்கு ஒவ்வொரு கொத்துயெடுத்து கல்லுரலில்போட்டு நன்ருய் பஞ்சுபோல் யிடித்து எட்டுபடி ஜெலம்வார்த்து அடுப்பிலேற்றி ஒருபடி கியாழமாகக் காச்சியிறக்கி வடித்துக்கொண்டு முத்தெண்ணெய் ஒருபடி அத்துடன் விட்டு கலந்துவைத்துக்கொண்டு,

பற்பாடகம்	சித்திரமூலம்
நிம்பப்பட்டை	கண்டுபரங்கி
சுக்கு	ஏலம்
செவியம்	சண்பகப்பூ
பேரரத்தை	சீரகம்
கோஷ்டம்	கிராம்பு

இவைகள் வகைக்கு (உ) விராகனிடை யெடுத்து யிடித்து வஸ்திரகாயஞ்செய்து எண்ணெயிற்கலந்து கம்பிப்பிசின் ஒரு களஞ்சிகொண்டுவந்து எண்ணெய் விட்டரைத்து அத்துடன்

கலந்துக்கொண்டு அடுப்பேற்றி மெழுகுபதமாய்காய்ச்சி வடித்துக்கொண்டு வேளைக்குத்துட்டிடை அல்லதுகாலணாயிடையாக அந்திசந்தி கொடுத்துவந்தால் அட்சரங்கள் காச்சல் பதினெட்டுகணங்கள் யாவும் தீரும்.

இரத்த கெணத்திற் கெண்ணெய்.

விருத்தம்.

எண்ணெய்படிகால்குமரிச் சோறுதானும்
  பெழில்விளாங்காயளவு கழுவிக்கொண்டு
அண்இண்டுதுமட்டிக்காய் சோறுகூட்டி
  அதில்ஈரவெங்காயம்பத் தரிந்துபோட்டு
கண்ணெனவேமெழுகுபத மெரித்துவாங்கி
  கணமானதுட்டிடையா மெண்ணெய்தானும்
நண்ணெனவேநாலுநாட் கொருபோதீய
  நாடாதுரத்தகணந் தீருந்தானே.

விபரம்.

எண்ணை-வ-படி, விளாங்காயளவு கத்தாழைமடல் சாதம், தும்மட்டிக்காய்சோறு எலுமிச்சங்காயளவு, யீரவெங்காயம்பத்து.

சம்பீரத்தெண்ணெய்.

பசும்பால்	படி - க	வெந்தயம்	பலம்-க
சித்தாமணக்கெண்ணை	,, க	கோஷ்டம்	விராகனிடை-உ
பழச்சார்	,, க	சீரகம்	பலம்-க
ஈருள்ளிச்சார்	,, ௨	கிராம்பு	,, க
கடுக்காய்தோல்	,, சய	சம்பங்கிமொக்கு	,, க
சன்னலவுங்கப்பட்டைபலம் க		ஜாதிக்காய்	,, க
அதிமதுரம்	,, க	ஏலம்	,, க

கற்கவகைகள் யாவும்யிடித்து சூரணித்துபழச்சாற்றுலரைத்து எண்ணெயிற் கலந்து மற்றயாவும் ஒன்றபடுத்தி பதமாய் காய்ச்சிவடித்து தேகத்திற்கு தக்கபடி (ரு-டு-எ)நாள் வீதம் கொடுக்கவும், மூலச்சூடு, கணச்சூடு, காந்தல், சொரி, சிரங்கு, மேகச்சூடுகளும் தீரும் இச்சாபத்தியம்.

மேகசூட்டுக்கு எண்ணெய்.

சித்தாமணக்கெண்ணெய்	படி	க
எலுமிச்சம்பழச்சாறு	,,	௨
இலந்தயிலைச்சாறு	,,	௨
வெங்காயச்சாறு	,,	௨
கருஞ்சீரகம்	பலம்	௨
கத்தாழைச்சோறு	,,	௩
வெந்தயம்	,,	க

கத்தாழை சாதத்தை ஏழுதரம் நல்ல ஜெலத்தில்போட்டு கழுவிப் பிசைந்தெடுத்து சுத்தியானது பலம் (௩) கருஞ்சீரகத்தைபொடித்து வஸ்திரகாயம்செய்தது பலம் (௨) வெந்தியத்தை பசும்பால்விட்டரைத்துக்கொண்டு யாவும் ஒன்றாய் கலந்து அடுப்பிலேற்றி கற்றாழை சாதம் நன்றாய் சிவக்குமளவும் காச்சி யிரக்கி வைத்துக்கொண்டு உச்சிக்கரண்டி வீதம் அந்திசந்தி இருவேளையும் கொடுக்க கொதிப்பு கணம் (மஅ) கணச்சூடு, அஸ்திசுரம், அஸ்திவெட்டை, மேகச்சூடு, பித்தவெட்டை முதலியயாவும் தீரும் குழந்தைகள் முதல் பெரியவர்களுக்கும் ஆகும் இச்சாபத்தியம்.

காதுநோய்களுக்குஎண்ணெய்.

கோழிப்பாவாரைவேர்	விராகநிடை-	க
குத்துப்பாலைவேர்	,,	க
ஆடுதிண்ணாப்பாலைவேர்	,,	க
கற்பூரம்	,,	க
பூண்டு	,,	க

இவைகளை நல்லெண்ணெய் விட்டறைத்து (க0) பலம் நல்லெண்ணெயில் கலந்து அடுப்பேற்றிக்காய்ச்சி யிரக்கி பஞ்சியில்தொட்டு வேளைக்கு (௩) துளியாக (௪-௫) வேளை காதில் விட்டால் காதுநோய் தீரும் மழையில் நனையக்கூடாதுசீதளபண்டம் ஆகாது.

இதுவுமது.

காதுநோய்க்குஎண்ணெய்.

முசுருமுட்டை	விராகநிடை	க0
பூநாகம்	,,	க0

நண்டிரைச்சி	விராகனிடை	கஉ
பூண்டு	,,	கஉ

பூண்டைமாத்திரம் நசுக்கி (கஅ) பலம் நல்லெண்ணெயில்போட்டு காச்சியிரக்கி பஞ்சியில் தொட்டு (ச-நு) வேளை காதில்விடவும் சவுக்கியமாகும்.

கெற்பசூட்டுக்கும் மேககாங்கத்திற்கும்

குளூமை யெண்ணெய்.

சித்தாமணக்கெண்ணெய்	பலம்	ய
கற்கண்டு	,,	க
வெந்தியம்	,,	க
ஏலம்	,,	க
வெள்ளைவெங்காயம்	,,	௩

வெங்காயத்தை சிறுக அரிந்துக்கொண்டு மற்றசரக்கை அறைத்துக்கொண்டு யாவும்எண்ணெயில்கலந்து சூரியபுடம் (ய) நாள்வைத்து வேளைக்கு அரிக்கால்பலம் சாப்பிடவும்.

சிரங்குக்கும் மேகசூட்டுக்கும் எண்ணெய்.

சித்தாமணக்கெண்ணெய்	பலம்	நு
மிளகு	,,	க
பூரம்	விராகனிடை	உ
முலைப்பால்	ஆழாக்கு	

பூரமும் மிளகும் முலைப்பால்விட்டரைத்து யாவும் ஒன்ருய்கலந்து (ய) நாள் சூரியபுடம்வைத்து வேளைக்குக் கரண்டிவீதம் சாப்பிடவும், இச்சாபத்தியம்

ரிணங்களுக்கு தேங்காயெண்ணெய்.

சுத்திசெய்தகெந்தி	பலம்	வ
சுத்திசெய்ததாளகம்	,,	வ
குகைநீறு	,,	வ
காட்டுசீரகம்	,,	வ
கொடிக்கள்ளிப்பால்	,,	வ

இரண்டு தேங்காய்களை திருகி பால் பிழிந்துக்கொண்டு ஷை தினுசுகளை வஸ்திரகாயம்செய்து பாலில் கலந்துக் கொண்டு பதமாய்க்காச்சி யிரக்கி பிரதிதினம் காலையில் காலணு யிடைசாப்பிட்டு வரவும் (ய) நாள் சாப்பிடலாம் இச்சாபத்தியம்.

லிங்கவெண்ணெய்.

லிங்கம்	பலம்	உ
விளக்கெண்ணெய்	,,	கஉ

லிங்கத்தை முலைப்பாலில் மூன்றுநாள் ஊரவைத்து யெடுத்துக்கொண்டு கல்வத்தில் இட்டு கொஞ்சம் வெண்ணெய் விட்டு ஒன்றறைஜாம மறைத்து ஷை வெண்ணெயில் கலந்து (ங) நாள் சூரியபுடம் வைத்தெடுத்து காலையில் அறைபலம் வீதமாய் (எ) நாள் அல்லது (ய) நாள் சாப்பிடவும் மேகப்படை கரிமேகம் வெள்ளை சுருக்குதீரும் கடும்பத்தியம்.

கடுகெண்ணெய்.

பெருங்காயம்	விராகனிடை	ங	வெள்ளுள்ளி	விராகனிடை	ங
வசம்பு	,,	ங	ஓமம்	,,	ங
சுக்கு	,,	ங	சதகுப்பை	,,	ங
கார்த்திகைக்கிழங்கு	,,	ங	மாவிலிங்கம்பட்டை	,,	ங
சாம்பிராணி	,,	ங			

ஷை சரக்குகளை குப்பைமேனிச்சார்விட்டறைத்து எண்ணெயில்கலக்கி அடுப்பேற்றி கடுகுபதம்வரும்போது இரக்கி வைத்துக்கொள்ளவும்.

ஷை எண்ணெயை சிறுக எடுத்து மேலேதடவினல் ஜன்னிபோகும் சயித்தியந்தீரும் கைகால்குடைச்சல் மேல்வலிகாதிரைச்சல்மண்டைகுத்து வலிப்புகள்தீரும்இச்சாபத்தியம்.

எண்ணெய் வகைபாணி

முற்றிற்று.

உ

தேவிசகாயம்.

ஏழாவது

தைலவகைபாணி.

சங்கம்வேர்தைலம்.

நல்லெண்ணெய்	படி	௨
மிளகு	பலம்	௧
சங்கம்வேர்	தொலாம்	௨

சங்கம்வேரை ஒருதூணிஆற்று ஜெலத்தில்போட்டு எட்டுக்கொருபங்காய் கியாழம்வைத்து யிரக்கி மிளகைகல்வத்திலிட்டு ஷெ கியாழம் விட்டரைத்து எண்ணெய் கியாழம் யாவும் ஒன்ருய்க்கலந்து மெழுகுபதமாய்காச்சி ௬, நாளைக்கொருமுறை முழுகிவர குட்டம் சொறி சிரங்கு கிரந்தி சூலைரோகம் செங்கரப்பான் வண்டுகடி சிலவிஷங்கள் க்ஷயம் குத்திருமல் வாதக்ஷயம் போகும்.

இருவேலித்தைலம்.

வெட்டிவேர் பலம் (௱) கொண்டுவந்து ஒன்றிரண்டாயிடித்து தூணிநீரில்போட்டு எட்டொன்ருய் கியாழம் வடித்து எண்ணெயில்கலந்து மெழுகுபதமாய்காச்சி முழுகிவரதேராதசெடலம் தேரிப்போகும் கிருகிருப்பு பித்தமயக்கம் வாய்நீரூரல்தீரும்.

அருகன்வேர்தைலம்.

கணுவுகள் நீக்கிய அருகன்வேர் பலம் நூறு யெடுத்து யிடித்து, ஒருபடி ஜெலத்தில்போட்டு எட்டொன்ருய் காச்சிமுழிகிவர மூலச்சூடு, கபாலச்சூடு சகலபித்தம் எட்டுவகை குன்மம் அழுகிரந்தி சூலைவாய்வு வயற்றுவலி நெஞ்சில்நோய் நீர்கடுப்பு மேல்வரட்சி இவைதீரும்.

கொட்டைப்பழத்தைலம்.

அவுரிபழம் நூறு பலம் கொண்டுவந்து யிடித்து தூணி நீரில்போட்டு எட்டொன்றாய் கியாழம்வைத்து யிருத்துநாழி நல்லெண்ணெயில்கலந்து ஒருபலம் கருஞ்சீரகத்தையும் யிடித்து ஷை கியாழம் விட்டரைத்து அத்துடன்கலந்துமெழுகு பதமாய் காச்சியிரக்கி முழுகிவர வாதம் குட்டம் வாதகரப்பான் கண்டவீக்கம் இவைகள்தீரும்.

கரிசாலைத்தைலம்.

கரிச்சாலைச்சாறு	படி	க
கற்றாழைச்சோற்றின்சாறு	,,	க
நெல்லிக்காய்சாறு	,,	க
நல்லெண்ணெய்	,,	க

இவையாவும் ஒன்றாய்க்கலந்து ஒருபலம் ஜாதிக்காயை ஷை சாற்றாலரைத்துப்போட்டு மெழுகுபதமாய் காச்சிவடித்து முழுகிவர தலைநோய், செவிநோய், பித்தம், பீனிசங்கள் உஷ்ணங்கள்யாவும் தீரும்.

இலுப்பைப்பட்டைதைலம்.

இலுப்பைப்பட்டை	பலம்	ரு
நல்லெண்ணெய்	படி	ம
வேப்பெண்ணெய்	,,	ரு
கம்மாருவெற்றிலைச்சாறு	,,	க

இவையாவும் ஒன்றாய்க்கலந்து அடுப்பேற்றி மெழுகுபதமாய்க்காச்சி முழுகிவர கபாலச்சூடு பரந்து போகும் எண்ணெய் கணக்கின்பேரில்பட்டைமுதலியதைகணக்கிட்டுபிரித்துக்கொண்டு வேண்டியவரையில் செய்துக்கொள்ளலாம்.

கெற்பத்தைலம்.

கொம்மட்டிப்பழவித்து அந்த யிடைக்கு வாளப் பருப்பும் கலந்து குழித்தயிலம் யிரக்கி புட்டியில் வைத்துக் கொண்டு தீட்டுவந்த (ந) நாள் துடங்கி மஞ்சள் தூளில் களஞ்சித்தயிலம்விட்டு (ந) நாள்காலையில்கொடுத்துவெந்நீர்கொடுக்கவும் பேதியாகும் மருந்து ஒரேவேளைதான்.

மேகத்தைலம்.

சந்தணம்	பலம்	൰
விலாமிச்சம்வேர்	,,	൰
ஆவாரம்பட்டை	,,	൰

இந்த மூன்று வகையும் யிடித்து பானையில்போட்டு தூணி நீர்விட்டு யெட்டொன்ருய்காச்சி முழுகிவர மேகம்தீரும் தேகம்யிருகும் நமை, சொரி, திமிர் இவைதீரும்.

வில்வாதித்தைலம்.

வில்வவேர் பத்துபலம் யெடுத்து யிடித்து பதக்கு நீரில் போட்டு எட்டொன்ருய் காச்சியிரக்கி அத்துடன் நாழி நல்லெண்ணெய்விட்டு மெழுகுபதமாய்காச்சிவடித்து முழுகிவர பித்தம், கபாலவெட்டை, மேகம், இருமல், தழுதணை, செங்கரப்பான், புண்புரை இவைதீரும்.

வெட்டிவேர்தைலம்.

வெட்டிவேர்	பலம்	க
அதிமதுரம்	,,	க
நல்லெண்ணெய்	,,	൰உ

வெட்டிவேரையிடித்து பதக்குநீரில்போட்டு எட்டொன்ருய் கியாழம்வடித்து அதிமதுரத்தை அந்த கியாழத்தாலரைத்து எண்ணெயில்போட்டு கியாழத்தையும்விட்டுமெழுகு பதமாய் காச்சி வடித்து முழுகிவர, பீனிசம், மண்டைகுலை குட்டம், புரநீர்க்கோவை, கண்புரைச்சல், காதுமந்தம், இளைப்பு, கைகால் ஒச்சல், தாது நஷ்டம், இருமல், தேககாந்தல் யிவைகள்தீரும் நாள்விட்டு நாள் ஒருமண்டலம் முழுகிவர வேண்டியது.

கொடிவேலித்தைலம்.

கொடிவேலிவேர்	பலம்	൰
நல்லெண்ணெய்	நாழி	க
சீரகம்	பலம்	க

கொடிவேலியை பிடித்து பதக்குநீரில்போட்டு எட்டொன்ருய் கியாழம்வைத்திரக்கி வடித்து இந்தகியாழத்தால் சீரகத்தைஅரைத்து யாவும் எண்ணெயில்கலந்து மெழுகுபதமாய்காய்ச்சி வடித்து முழுகிவர ஆநந்தவாய்வு மற்றபலவிதவாய்வு சொரிசிரங்கு தினவு கிரந்தி வீக்கம் யாவும்தீரும்.

சீரகத்தைலம்.

சீரகம்	பலம்	ரு
கார்போகியரிசி	,,	க
நல்லெண்ணெய்	படி	க

சீரகத்தை பதக்குநீரில்போட்டு எட்டொன்ருய் கியாழம்வடித்து இதேகியாழத்தால் கார்போகியரிசியை அறைத்து யாவும் யெண்ணெயில்கலந்து மெழுகுபதமாய்காய்ச்சி முழுகிவ்ர எண்வகைசுரம் வாய்வு வாந்தி பித்தம் கிருகிருப்புசோகை பாண்டு உஷ்ணரோகம் செணம் கபாலச்சூடு கபநீர்கட்டு இவைதீரும் கண்கள் குளிர்ச்சியுண்டாகும்.

கீழ்க்காய் நெல்லித்தைலம்.

கீழ்க்காய்நெல்லி அறைதுலாம் எடுத்து நிழலில்உலர்த்தி ஆத்துஜெலம் தூணிகொண்டுவந்து அதிற்போட்டு எட்டொன்ருககியாழம் காச்சியிரக்கி உ, படி நல்லெண்ணெயில் விட்டுக்காச்சி ஒருபலம் சக்கரைபோட்டு மெழுகுபதத்தில் முழுகிவர மேகம் உட்டிணம் கைகாலெரிவு உட்காச்சல் தினவு யாவும் தீரும்.

சவுரித்தைலம்.

சவுரிப்பழம்		ஒன்று
பச்சைகெஞ்சாயிலே		ஒருபிடி
சடாமாஞ்சி	விராகநிடை-	உ௰
மிளகு	,,	உ௰
பளிங்குசாம்ராணி	,,	உ௰
கஸ்தூரிமஞ்சள்	,,	உ௰
பச்சியிலே	,,	உ௰
கிச்சிலிக்கிழங்கு	,,	உ௰
அமுக்கனுங்கிழங்கு	,,	உ௰
அதிமதுரம்	,,	உ௰

இவையாவும் யிடித்து வஸ்திரகாயம்செய்து ஒருபடிநல்லெண்ணெயில் போட்டுக்கலந்து மெழுகுபதமாய் காச்சி (௪) நாளைக்கொருமுறை முழுகிவர புரயிசுவு, ஒற்றைத் தலைவலி, விடாததலைபாரம் ஜன்னி இவையாவும் தீரும்.

மேருவின்தைலம்.

எள்ளெண்ணெயோர்படியில் தும்பைமலரோர்பிடி
எரித்துபத மாய்வடித்து
இன்பமுடன்மூன்றுமுறை முழுகுமதின்விபரமும்
எடுத்துரைக்க் கேளுமே
கள்ளமரசிரசுமட்டாகவதை தேய்த்துமே
காச்சியே சிக்காய்தனை
கருத்துடன்வெந்நீரில் பச்சைஜெலமின்றியே
கணக்குடன் மூழ்கியன்று
தல்விருபுளிமோர் குளிர்ந்தஜெலமின்றியே
ஸ்தானமது கொள்ளவல்லோர்
தள்ளாதசிரசிடிகள் பீனிசமுநேத்திரநோய்
தான்பயந் தோடுமிதினில்
வள்ளிதெய்வானையர ஞர்கிருபைபெத்தபொதி
மாமலை யகஸ்தியரிதை
வரிசையுடன்மேருவின் தைலமதைகவிதையாய்
வகுத்துரைத் தனர்பாருமே.

ஜன்னிக்கு மேற்பூசுந்தைலம்.

வேப்பெண்ணெய்	படி	க
கலப்பைக்கிழங்குசாறு	,,	க
கருநாபி	விராகனிடை	௯
வசம்பு	,,	௫
வெள்ளைப்பூண்டு	,,	௫
காயம்	,,	௯
ஓமம்	,,	௫
சதகுப்பை	,,	௫
ஜாதிக்காய்	,,	௰

இந்தசரக்குகள் யாவும் ஷை கிழங்குசாற்றால் மைபோல் அறைத்து எண்ணெயில்கலந்து அடுப்பேற்றி கடுகுபதமாய்கா ச்சிவடித்து சகல ஜன்னிக்கும் மேலுக்கு பூசவும் கைகால்கு டைச்சல் வாய்வுபிடிப்பு சகலத்திற்கும் பூசிதேய்க்கலாம்உள் ளுக்கு கொடுக்கக்கூடாது மஞ்சள் அறைத்துப்பூசி அதற்கு மேல் சாணம்போட்டு தேய்த்து நீர்விட்டு கழுவிப்போடவும்

தும்பைத்தைலம்.

நல்லெண்ணெ	பலம்	வ
தும்பைப்பூ	பிடி	உ
கருஞ்செம்மைப்பூ	,,	க
கம்மாருவெற்றிலைக்காம்பு	,,	௪
நஞ்சருப்பான்பூண்டு	,,	௪
கோழிக்கிழங்கு	விராகநிடை	க
கஸ்தூரிமஞ்சள்	,,	க
மிளகு	,,	க
பூண்டு	,,	க
வசம்பு	,,	க
பால்சாம்ராணி	,,	உ
சுக்கு	,,	க

மேற்கூரிய பூவும் காம்பும் நசுக்கி யெண்ணெயில்போட்டு மற்றசரக்குகள் யாவையும் யிடித்துப்பொடித்து வஸ்தரித்து அத்துடன் போட்டுக்கலந்துஅடுப்பேற்றி கடுகுபதமாய் காச் சிவடித்து முழுகிவர சுகஜன்னி சுரம் வாய்வுமுகவாதசன்னி சுரம் இன்னும் சிலவியாதிகள் தீரும்.

செம்பைத்தைலம்.

கருஞ்செம்பைச்சாறு	படி	வ
வெள்ளுள்ளி	,,	வ
நல்லெண்ணெ	,,	௪
பளிங்குசாம்ராணி	விராகநிடை	உ௪
டிக்காமல்லி	,,	க௪

சாம்ராணியும் டிக்காமல்லியு மிடித்துப்பொடித்து யாவும் ஒன்றாய்க்கலந்து அடுப்பேற்றி தைலபதமாய் காச்சிவடித்து ஜன்னி நோய்கள் வாதநோய்களுக்குப்பூசி நன்றாய் தேய்க்க வும்.

அழிஞ்சித்தைலம்.

அழிஞ்சிவிரை	பலம்	க
புங்கன்விரை	,,	க
கடுக்காய்விரை	,,	க
தாணிக்காய்விரை	,,	க
கார்போகியரிசி	,,	க
எட்டிவிதை	,,	வ
நல்லெண்ணெ	,,	யஉ
வேப்பெண்ணெ	,,	உ0

வித்துகள் யாவையுமிடித்து பொடித்து வேப்பெண்ணெ விட்டரைத்து நல்லெண்ணெயிற்கலந்து அடுப்பேற்றி கடுகுபதமாய்காச்சி வடித்து தலைவலி, கழுத்துவலி, வாய்வு,வீக்கங்கள் சகலத்திற்கும் தேய்த்துவர நீங்கும்.

தீபாக்கினித்தைலம்.

கெந்தி	பலம்	வ	மனோசிலை	பலம்	வ
சூதம்	,,	வ	பொன்னரிதாரம்	,,	வ

மேற்படி சரக்குகளை காடிவிட்டரைத்து சீலையில்தடவிதிரிசெய்து வேப்பெண்ணெய்விட்டு கொளுத்தி சுடர்தைலம் வாங்கிவைத்துக்கொண்டு ஒருவிராகனிடை வெற்றிலைச் சாற்றில் ஒருகுண்டுமணிப் பிரமாணம் ஷை தைலத்தை கலந்துக்கொடுக்க வாதம் எண்பதும் தீரும் இச்சாபத்தியம்.

தைலவகைபரணி

முற்றிற்று.

தேவிசகாயம்.

எட்டாவது

கியாழவகைபரணி.

சந்தனக்கியாழம்.

செஞ்சந்தனத்தூள்	பலம்	௨
விலாமிச்சம்வேர்	விராகனிடை	௨
வெட்பாலரிசி	,,	௨
கோரைக்கிழங்கு	,,	௨
சுக்கு	,,	௨

ஆத்துஜெலம் இரண்டுபடிகொண்டுவந்து அதில்ஷெசரக்குகள்யாவும் யிடித்துப்போட்டு அடுப்பேற்றி கால்படிகியாழமாக யிரக்கி வடித்துக்கொண்டு ஆறு வேளையாக பாகித்துக்கொடுக்கவும் கொடுக்கும்போது கொஞ்சம் சக்கரை போட்டுகொடுக்கவும், சிரதோஷம் சிரவாய்வு தலையிலுள்ள பித்தம் சேத்துமவாதம், வாதசுரம், நீர்கடுப்பு, மஞ்சளுரும் பித்தம், இவைகள்தீரும் இருமுரைகாச்சி (௰௨) நாள் இருவேளையும் கொடுக்கவும்.

சிறுகாஞ்சொரிக் கியாழம்.

சிறுகாஞ்சொரிவேர்	பலம்	௨
ஏலக்காய்	,,	௪
சீரகம்	,,	௪

இவைகளை யிடித்துஇருநாழிநீர்விட்டு எட்டொன்ருய்க்காய்ச்சி வடித்து இருவேளையுமாக எட்டுநாள் குடிக்க உட்சுரம் மூலவாய்வு, பித்தம், வாந்தி இவைதீரும்.

வெட்பாலைக்கியாழம்.

வெட்பாலையரிசி	பலம்	க
சீரகம்	,,	௪
கொடிவேலிவேர்	விராகனிடை	க௦

இவைகளை யிடித்து இருநாழிநீர்விட்டு எட்டொன்றுய்க்காச்சி வடித்து ரு, நாள் இருபோதும்குடிக்க வாய்வு,பித்தசுரம்தீரும், கொடுக்கும்போது கொஞ்சம் தேன்விட்டுக் கொடுக்கவும்.

வில்வக்கியாழம்.

வில்வவேர்	பலம்	ரு
வில்வப்பழம்	,,	க
நெற்பொரி	,,	வ
சுக்கு	,,	வ
மிளகு	,,	வ
கொடிவேலிவேர்	,,	வ

இவைகளை யிடித்து இருநாழி நீர்விட்டு எட்டொன்றுய் வடித்து இருவேளையும் மூன்றுநாள் கொடுக்க வாய்வு, மேக வாய்வு, பித்தவாய்வு, யாவும்தீரும்.

இதுவுமது.

வில்வவேர்	பலம்	வ
அமுக்கனுங்கிழங்குவேர்	,,	வ
சுக்கு	,,	வ

இவைகளை யிடித்து இருநாழி நீர்விட்டு எட்டொன்றுய்க் கியாழம்வடித்து மூன்றுநாள் இருவேளையும்கொடுக்கவிக்கல்வாந்தி இவையாவும்தீரும் பித்தசாந்தியாம்.

கோரைக்கிழங்குகியாழம்.

கோரைக்கிழங்கு	பலம்	க
விஷ்ணுகாந்தி	,,	உ
பற்பாடகம்	,,	உ
மிளகு	,,	வ
மதுரம்	,,	வ

இவைகளை யிடித்து இருநாழிநீர்விட்டு எட்டொன்றுய் வடித்து (ரு) நாள் இருவேளையும்கொடுக்கவும் க்ஷயம்யிளைப்பு, அதிகசுவாசம் இவைதீரும், கியாழம் கொடுக்கும் போது கொஞ்சம் தேன்கூட்டவும்.

நெல்லிக்காய்கியாழம்.

நெல்லிக்காய்	பலம்	வ
தாணிக்காய்	,,	வ
கடுக்காய்	,,	வ
மிளகு	விராகனிடை	கவ

இவைகளை இருநாழி நீர்விட்டு எட்டொன்றாய் கியாழம் வடித்து மூன்றுநாள் குடிக்கும்போது, சுக்கு,திப்பிலி,மிளகு, மூன்றும் சரியிடையாய்பொடித்து ஒருசிட்டிக்கைப் போட்டு கொஞ்சம் தேன்விட்டு குடிக்கவும் பீனை, பிசிவு, மேகச்சூடு, இவைகள் தணியும்.

இலவம் பட்டை கியாழம்.

இலவம்பட்டை இரண்டு குத்துயெடுத்து பஞ்சுபோல் நருக்கி அரிக்கால்படி கஞ்சித்தண்ணியில்போட்டு நல்லதண்ணீர் கால்படிவார்த்து இராத்திரி அடுப்பில் போட்டுவைத்து காலையில்பிழிந்து அசடுகள்போக்கி வடிகட்டி கொஞ்சம்சர்க்கரைகலந்து சாப்பிடவும் இப்படி (ரு-சு) நாள்சாப்பிட மேக வெள்ளைதீரும் இச்சாபத்தியம்.

இரத்தபேதிக்குகியாழம்.

நாகப்பட்டை	பலம்	உ|ற
அத்திப்பட்டை	,,	உ|ற
மாம்பட்டை	,,	உ|ற

இவைகளை பஞ்சுபோல்யிடித்து ஒருபடி தண்ணிவைத்துகால்படி கியாழமாக யிரக்கி இருவேளை சாப்பிடவும் இப்படி (ரு-சு) நாள்சாப்பிட இரத்தபேதி தீரும்.

வாதசுரகியாழம்.

பாவட்டம்வேர்	பலம்	க
சித்தாமுட்டிவேர்	,,	க
ஓமம்	,,	க
உத்தாமணிவேர்	,,	க

இவைகளை பஞ்சுபோல் யிடித்துஒருபடிஜெலம்வைத்து கால்படியாக கியாழமாக யிரக்கிவடித்து (ரு-சு)வேளை சாப்பிட வாதசுரம்தீரும் கொஞ்சம் தேன்விட்டுசாப்பிடவும்.

பித்தசுரகியாழம்.

பேய்ப்புடல்	பலம்	க
கோஷ்டம்	,,	க
கொத்தமல்லி	,,	க
சுக்கு	,,	க
வில்வவேர்	,,	க
பற்பாடகம்	,,	உ௰

இவைகளை பஞ்சுபோல் யிடித்து (க௰) படி ஜெலத்திலிட்டு யெட்டுக்கொன்ருய் கியாழம்வடித்து (ரு-சு) வேளைகொடுக்க சவுக்கியமாகும் கொடுக்கும்போதுகொஞ்சம் தேன்விட்டுக்கொடுக்கவும்.

சேத்துமசுர கியாழம்.

இஞ்சி	பலம்	உ௰
பிரண்டை	,,	க
கண்டங்கத்திரிவேர்	,,	௰
சித்தரத்தை	,,	க
சுக்கு	,,	௰
பூணைக்காலிவேர்	,,	௰
பூலாவேர்	,,	௰
பொன்முசுட்டை	,,	௰
பூண்டு	,,	௰
வில்வவேர்	,,	உ

இவைகளை பஞ்சுபோல் யிடித்து (க௰) படிஜெலம்விட்டு எட்டொன்ருய் கியாழமிட்டு கொடுக்கும்போது கொஞ்சம் தேன்விட்டுக் கொடுக்கவும் (ரு-சு) அல்லது (அ) வேளைகொடுக்க தாகம் வாந்தி மயக்கம் சுரம் இவைதீரும்.

மாந்தக் கியாழம்.

வசம்பு காவட்டம்புல்லு இவ்விரண்டும் சமன் கொண்டு சட்டியில்போட்டு சாம்பலாக்கி கருஞ்சீரகம் வெடிக்கவிட்டு

ஆழாக்கு தண்ணிவிட்டு காலாழாக்காக யிரக்கிக்கொடுக்கவும் இப்படி (ச-ரு) வேளைகொடுக்க மாந்தம் குணப்படும்.

அதிசாரதாபசுரம்.

கொத்தமல்லி	சற்கரை
சீரகம்	கோஷ்டம்
விலாமிச்சம்	கற்பூரம்
வெட்டிவேர்	அதிமதுரம்
சந்தனம்	தாமரைக்கிழங்கு
கோரைக்கிழங்கு	அத்திப்பட்டை
நெல்லிபருப்பு	ஆலம்பட்டை
மாம்பட்டை	அரசம்பட்டை

இவை சமன்கொண்டிடித்து ஒருபடிஜெலம்விட்டு யெட்டி லொன்றாய் கியாழம்வடித்து இருவேளையும் அஞ்சுநாள் கொடுக்கவும் அதிசாரதாபசுரம் சொஸ்தமாகும்.

குழந்தைகள் மாந்தத்திற்குகியாழம்.

நுணாயிலை	உத்தாமணியிலை
நொச்சியிலை	கெச்சக்காய்வேர்

இவைகள் வகைக்கு ஒருபிடி யெடுத்து நன்றாய் நருக்கி நாழிநீர்விட்டு அடுப்பேற்றி யெரிக்கும்போது,

ஓமம்	திப்பிலி
சுக்கு	வசம்பு
மிளகு	பொடுதலைக்காய்

இவைகள் வகைக்கு விராகனிடை ஒன்றாயெடுத்து துளி நல்லெண்ணெவிட்டு சிவக்கவருத்து யிடித்துப்பொடித்துமெல் லிய துணியில் கட்டிமுடிந்து மேல்படி கியாழத்தில் போட்டு க்காச்சிவடித்து ஒருசங்கு வார்க்கவும் இப்படி (௩-ச) வேளை வார்க்க மாந்தம் தீரும்.

மாந்தத்திற்கு வேறுகியாழம்.

ஓமம்	மிளகு
உள்ளி	திப்பிலி
வாய்விளங்கம்	பெருங்கிழங்கு

இவைகள் சமன்கொண்டு யிடித்து மெல்லிய துணியில் மூட்டைகட்டி நாழிநீரில்போட்டு மூன்றுபொங்கு வரும்படி காச்சியிருத்து (உ-ரு) வேளைகொடுக்கவும்.

மாந்தத்திற்கு வேறுகியாழம்.

விருத்தம்.

சுக்குமிளகுதிப்பிலியும் துய்யஓமம்உள்ளியுடன்
ஒக்கநருக்கிச்சீலையினில் உகந்துமுடிந்துநீர்வுழக்காய்
செக்கச்சிவக்கக்காச்சியபின் சீராய்சங்குபுகட்டிடவே
மிக்கமாந்தபிணிதோஷம் விட்டேயோடுங்கண்டாயே.

முறைவாதசுரக் கியாழம்.

சண்பகப்பூ
ஆமணக்குவேர்
கொத்தமல்லி
சுக்கு
தாணிவேர்
செருப்படைவேர்
கண்டங்கத்திரி
மிளகு

இவைசமன்கொண்டு பஞ்சுபோல் யிடித்து ஒருபடிதண்ணீர்விட்டு எட்டொன்ருய்கியாழம்வடித்து உட்கொள்ளவும்,

தனிவாத சுரக்கியாழம்

நல்லசந்தணம்
சுக்கு
கோரைக்கிழங்கு
பற்பாடகம்

இவை பஞ்சுபோல்யிடித்து ஒருபடி ஜெலம்விட்டு எட்டொன்ருய்கியாழம் வடித்து உட்கொள்ள வாதசுரம் தீரும் இப்படி (ரு) நாள் ஆறுவேளையாம்.

முறைபித்தசுரக்கியாழம்.

கோரைக்கிழங்கு
நன்னாரிவேர்
சந்தணம்
தண்ணிவிட்டான்கிழங்கு
சீந்திற்கிழங்கு
கோஷ்டம்
சுக்கு
அதிமதுரம்

இவை சமன்கொண்டு பஞ்சுபோல்யிடித்து எட்டொன்ருய்கியாழம்வடித்து இருவேளையுமாக மூன்றுநாள் கொடுக்க நிவர்த்தியாகும் தேன்கொஞ்சம் கூட்டிக்கொடுக்கவும்.

மூரைபித்தவாதசுரக்கியாழம்.

தேள்கொடுக்குவேர்	ஆரைவேர்
இலந்தைவேர்	கடுக்காய்தோல்
சித்தாமுட்டிவேர்	சுக்கு

இவை சமன்கொண்டிடித்து படிஜெலம்விட்டு எட்டொன்ருய்கியாழம்வடித்து மூன்றுநாள் ஆறுவேளை உட்கொள்ள முறைபித்த வாதசுரம் சவுக்கியமாகும்.

விடாசுரக் கியாழம்.

சிறுதேக்கு	ஆரைவேர்
சீந்திற்கொடி	கோஷ்டம்
நிலவேம்பு	திப்பிலி
ல்ற்பாடகம்	சுக்கு

இவை சமன்கொண்டிடித்து ஒருபடி ஜெலம்விட்டு எட்டொன்ருய் கியாழம்வடித்து கொஞ்சம்தேன்விட்டு கொடுக்கவும் (நி-சு) வேளைகொடுக்கவும் அல்லது (ம)வேளைகொடுக்க சவுக்கியமாகும்.

மாந்தவீக்கம் விஷவீக்கம் சுரம் நீர்கட்டுக்குக் கியாழம்.

பூவரசன்பழுப்பு	வரமுள்ளி
சங்கன்வேர்பட்டை	முருங்கையீர்க்கு
சீந்திற்கொடி.	சார்வேளைவேர்
துளசி	மருள்கிழங்கு
பிரமியிலை	சிறுகுரிஞ்சான்வேர்
தூதுவேளை	கருஞ்சீரகம்
சத்திசாரணை	நீர்முள்ளிவேர்
சுக்கு	பெருங்கிழங்கு

இவைகளை வகைக்கு (வ) பலம் எடுத்து கல்லுரலிலிட்டு பஞ்சுபோல் இடித்து ஒருபடி ஜெலம் வைத்து எட்டொன்ருய் கியாழம் வைத்திருத்து வடித்து வேளைக்கு ஒருபங்கு வீதம் காலைமாலைபாக மூன்றுநாள் கொடுக்கவும் சகலவீக்கம் சுரம் வயருப்பிஷம் யாவும்தீரும்.

கெணமாந்தம் வாந்தி வயருப்பிசத்திற்கு கியாழம்.

வசம்பு	மிளகு
கருப்புப்பட்டு	மயிலிறகு
வட்டத்திருப்பி	நிலவேம்பு

இவைகள்வகைக்கு ஒருவிராகநிடை யெடுத்து சட்டியி லிட்டு சாம்பலாகவருத்துக்கொண்டு மாதுளம்யிலை நிலவிளா யிலை செம்பருத்தியிலை இவைகள்வகைக்கு ஒருபிடி எடுத்து ஷை சட்டியில்போட்டு சிவக்கவருத்துக்கொண்டு அத்துடன்,

கண்டுபாரங்கி	அக்கிரா்காரம்
சுக்கு	அதிமதுரம்
சன்னராஷ்டம்	ஏலக்காயரிசி

இவைகள் வகைக்கு ஒருவிராகநிடையெடுத்து நருக்கிப் போட்டு அறைப்படி ஜெலம்வார்த்து அறையாழாக்கு கியாழ மாகவடித்து (அனுபோகவயித்தியமுதற்காண்டம்) 74-வது பக்கத்தில் கூரியிருக்கும் மாந்தக்குளிகையில் ஒருமாத்திரை யிழைத்து ஒரு சங்கு கியாழத்தில் கலந்து வார்க்கவும் இப் படி இரண்டு மூன்றுவேளைவார்க்க மேற்கண்ட வியாதி சவுக் கியமாகும்.

மூக்குமாந்தம்

அள்ளுமாந்தத்திற்கு கியாழம்.

ஒருபிடி நுணாயிலைபை சிறுகயறிந்து அடுப்பிலேற்றி அத் துடன் மிளகுஒருவிராகநிடை கடுகுஒருவிராகநிடை போட்டு

கருகவருத்து கருஞ்சீரகம் ஓமம் வகைக்கு ஒரு விராகனிடை போட்டு வெடிக்கவிட்டு சன்னராஷ்டம் சுக்கு நருக்கிப்போட்டு உ-படி ஜலம்விட்டு ஆழாக்குகியாழமாக சுண்டக்காய்ச்சி வடித்துக்கொண்டு ஒருசங்கு கியாழத்தில் அனுபோக வயித்திய முதற்காண்டத்திற்கூறிய பாலசஞ்சீவிமாத்திரை ஒன்றிழைத்து வார்க்கவும் இப்படி (உ-ரு) வேளைவார்க்க தீரும்.

மாந்தத்திற்கு பொது கியாழம்.

வெற்றிலைக்காம்புபதினொன்று மேவும்வசம்புஅவ்வளவு
பற்றிஉள்ளிதான்யிரண்டு பண்பாந்திப்பிலிதான் ஒன்று
சுற்றிவெதுப்பித்தானறைத்து சுகமாய்பருவந்தக்கபடி
வற்றியவென்னீர்தனிலிடவே மாந்தம்போமென்றருளினரே.

மாந்தத்திற்கு வேறுகியாழம்.

விடுமேஓமம்உள்ளியுடன் மீறும்மிளகுதிப்பிலியும்
நடுமேசீலைதனில்முடிந்து நன்றாய்நாழிநீர்தன்னில்
இடுமேஅடுப்பில்எட்டொன்றாய் இதமாய்காச்சிகுடிநீரை
கொடுமேமாந்தம்உள்ளமெலாம் குடிபோமென்று கூறினரே.

மாந்தத்திற்கு வேறுகியாழம்.

வெண்பா.

வேளைவேர்சுக்குடனே வெந்தயம்வெள்ளுள்ளி
பாளைசேர்ஓமம் பருவசம்பு—வாள்விழியாய்
ஒன்றாகக்காச்சி உடன்குழவிக்கீய
கண்டாலும்மாந்தம்போங் காண்.

சர்வமாந்தக்கியாழம்.

உத்தாமணியிலை	பொடுதலை
வேலிவேர்	முருங்கைப்பட்டை
நொச்சிலி	நுணாயிர்க்கு

இவைகள் சமன்கொண்டு சட்டியிலிட்டுவருத்து அறைப்படி நீர்விட்டு ஓமம், சுக்கு, திப்பிலி, மிளகு,வசம்பு, இவைகள் சமன்கொண்டு பொடித்து சீலையில்முடிந்து ஷை ஜெலத்தில்போட்டு எட்டொன்றாய்க் காச்சிவடித்து முதற்பாகத்திற் கூறிய மாந்தக் குளிகையில் ஒன்றிழைத்து வார்க்கவும் இப்படி (சு-ரு) வேளைவார்க்கவும்.

மாந்தஉப்பிஷத்திற்கு கியாழம்.

ஒப்பும்ஓமம்காசெடையை உகந்துசட்டிதனில்வருத்து
குப்பைமேனிவேர்ப்பட்டை கூரும்யிரண்டுபலந்தானே
அப்பான்தண்ணீரரைப்படியை அளவாயெட்டுக்கொன்றாக்கி
வைப்பாய்கொடுக்கவேஉப்பல் மாந்தம்போகும் கண்டாயே.

ஐந்துவிதமாந்தத்திற்கும்
ஒரேகியாழம்.

வேப்பம்யீர்க்கு	பொடுதலை
நொச்சிலியீர்க்கு	ஓமம்
நுரையீர்க்கு	உள்ளி
மாவிலையீர்க்கு	திப்பிலி
கொடிவேலியீர்க்கு	வாய்விளங்கம்
புளியம்யீர்க்கு	கற்பூரவள்ளி

இவைகள் சமன்கொண்டு பஞ்சுபோல் நருக்கி நாழிநீர் விட்டு எட்டுக்கொன்றாய் கியாழம்வைத்து வேளைக்கொருசங்காய் (ரு-சு) வேளைவார்க்கவும் ஊதுமாந்தம், போர்மாந்தம், கத்திமாந்தம், கட்டுமாந்தம், செரியாமாந்தம் இவைதீரும்.

பித்தத்திற்குக் கியாழம்.

நெல்லிமுள்ளி	சித்தாமுட்டி
வில்வப்பழம்	நெற்பொரி
சீரகம்	கொத்தமல்லி

இவைகளை சமன்கொண்டு யிடித்து அறைப்படி ஜெலம் வைத்ற எட்டொன்றாய் கியாழம்வைத்து (சு-ரு) வேளைகொடுக்க நிவர்த்தியாகும்.

அஜீரணகிராணிக்குக் கியாழம்.

ஓதியம்பீர்க்கு சுக்கு
கருவேப்பிலைபீர்க்கு சீரகம்
முக்காவேளை அசமதாகம்

இவைகளை சமன்கொண்டு யிடித்து கால்படி ஜெலம்வைத்து அரிக்கால்படியாக யிரக்கி இருவேளை சாப்பிடவும் இப்படி (௬-௫) வேளைசாப்பிடத்தீரும்.

குன்மவயற்றுவலிக்குக்கியாழம்.

பிரண்டை, வேப்பம்பீர்க்கு, புரசவித்து, அசமதாகம், இவை சமன்கொண்டு யிடித்து கால்படி தண்ணிவைத்துஅரிக்கால்படியாக யிரக்கி இருவேளைசாப்பிடவும், இப்படி-௬-௫ வேளைகொள்ளவும்.

அண்டநோய்க்குக் கியாழம்.

புனல்முருங்கைவேரின்பட்டை
ஆண்கெச்சக்காயின்பருப்பு
கண்டங்கத்திரியிலை

இவைகள் சமன்கொண்டு உ-படி தண்ணிவைத்து அரிக்கால்படியாகக் கியாழமிட் டிரக்கி இருவேளையும் கொள்ளவும் இப்படி ஆறுவேளைகொள்ள விரைநோய் நரம்பு தடிப்பு இவைதீரும்.

ஜெலக்கட்டுக்குக் கியாழம்.

ஜெலத்திலிருக்கும் கொடிப்பாச்சி
கண்டங்கத்திரியிலை
வாழைமரத்தின் அடிக்கிழங்கு

இவைகள் வகைக்குப்பலம்-உ, எடுத்து அரைப்படி ஜெலத்திலிட்டு அரிக்கால்படியாகக்காச்சி யிரக்கிவடித்துகொஞ்சம் பொட்டிலுப்புப் போட்டு குடிக்கவும் இப்படி (௬-௫)வேளைகொடுக்க நீர்கட்டு உடையும்.

ஜன்னிதோஷத்திற்கு கியாழம்.

கடுக்காய்தோல்	சுக்கு
தான்றிக்காய்	வெதுப்படக்கி
கொத்தமல்லி	சித்திரமூலம்
நெல்லிப்பருப்பு	கடுகுரோகணி
ஏலம்	கஞ்சாங்கோரை

இவைகள் வகைக்குப்பலம் (க) எடுத்து பஞ்சுபோல்யிடித்து படிஜெலம்வைத்து கால்படியாக யிரக்கி (ரு-சு) வேளை கொடுக்க ஜன்னிதோஷம் தாகம் இவைதீரும்.

சேத்துமசுரக்கியாழம்.

வேம்பு	பற்பாடகம்
கண்டங்கத்திரி	நன்னாரிவேர்
ஆலங்கனி	காவட்டம்புல்
வில்வம்	துளசி
ஆடாதோடை	கஞ்சாங்கோரை

இவைகள் ஷ யிடைகொண்டு யிடித்து ஒருபடிஜெலம் வைத்து நாலுக்கொன்ருய் கியாழம் வடித்து (ரு - சு) வேளை கொடுக்க சவுக்கியமாகும்.

இதுவுமது.

சேத்துமசுரக்கியாழம்.

சுக்கு	அதிவிடையம்
கடுக்காய்	தேவதாரம்
வசம்பு	இலவம்பட்டை
முத்தக்காசு	மிளகு

இவைகள் வகைக்கு ஒருபலம்கொண்டு ஒருபடி ஜெலத்தில்போட்டு நாலுக்கொன்ருய் கியாழம்வடித்து(ரு-சு)வேளை கொடுக்க சேத்துமசுரம் தீரும்.

சேத்துமசுரத்தின்கியாழம்.

விருத்தம்.

வெய்யவுளக்கமிருமலுடன் விதனமுருக்கிமேல்வெளுத்து
செய்யமலமும்அடைப்பட்டு தினவுந்தினமும் சுரமுண்டாய்

பையவாயுமிரத்திற்கும் பசியுமில்லைபார்க்குங்கால்
அய்யசுரத்தின்குணமென்று ரெல்லாந்தெரிந்தபெரியோரே.

இதற்குக்கியாழம்.

மலைதாங்கி	நீர்பூலாவேர்
முத்தக்காசு	நாவற்பட்டை
அத்திப்பட்டை	மாதளங்கொழுந்து
இருவேலியிலை	அதிவிடையம்
மாம்பட்டை	கோஷ்டம்
காசுக்கட்டி	அதிமதுரம்
சீரகம்	வகைக்குப்பலம்(உ)

இவைகளை யிடித்து ஒருபடி ஜெலத்திலிட்டுநாலுக்கொன்றாய் கியாழம்வடித்து இருவேளையுமாக (௩-௪) நாள் கொள்ள சேத்துமத்தாலெடுத்த சகலவியாதியும் தீரும்.

ஷை சுரத்திற்கு

வேறுகியாழம்.

நிலவேம்பு அதிவிடையம் கோரைக்கிழங்குசிந்திற்றண்டு கொடிசைபாலை இவை சமன்கூட்டி இருநாழிநீர்விட்டுநாலுக்கொன்றாய்காச்சி (௩) நாள் கொள்ளத் தீரும்.

ஷை சுரத்திற்கு

வேறுகியாழம்.

கோரைக்கிழங்கு, பெருமரப்பட்டை, வேப்பம் யீர்க்கு, நிலவேம்பு, வில்வபத்திரி, சுக்கு, இவை சமன்கூட்டி முன்மாதிரி காச்சிகுடிக்க நிவர்த்தியாகும்.

குளிர்சுரம் முதலிய பலவித சுரத்திற்கும் கியாழம்.

கோரைக்கிழங்கு	கடுக்காய்தோல்
சிந்தில்தண்டு	குராசானிஓமம்
வில்வம்	சிற்றுமுட்டி
கொத்துமல்லி	திப்பிலி
பேய்ப்புடல்	வகைக்கு சமனிடை

இவைகளையிடித்து இருநாழிநீர்விட்டு அறைத்திட்டமாய்க்காச்சி காலைமாலையாக (சு - ரு) நாள் கொள்ள சகலசுரமும் விட்டோடும் மலக்கட்டுவிடும் வாதபித்த சேட்டுமமாகிய மூவிதசுரமும் தீரும்.

இதுவுமது.

பலசுரக்கியாழம்.

விருத்தம்.

குருவிக்கரும்புகண்டங்காலி குருந்தமுட்டிவேரினொடு
மருவிக்கொண்டங்கிருநாழி நீர்விட்டெரித்துஉழக்காக்கி
வெருவிக்கொண்டுசக்கரையை விட்டுகலக்கிக்குடிப்பீராய்
உருவிக்கொண்டுவாதபித்த உள்ளதெல்லாங்குடிபோமே.

இதுவுமது.

பலசுரக்கியாழம்.

கொத்தமல்லிசுக்குவலை யத்துநிலவேம்புடனே
முத்தமொடுபெருங்குமிழு முத்துசிறுதேக்குதாரம்
வித்தகபற்பாகமும் வெத்திருநாழிச்சலத்தில்
பெத்திடமேவாதமொடு பித்தமருமென்றன்றே.

இதுவுமது.

பலசுரக்கியாழம்.

நிலவேம்பு, சித்திரமூலம், தாமரைவளையம், மூக்காவேளைவேர், சிந்திற்றண்டு, விஷ்ணுகாந்தி, பற்பாடகம், இவை சரியிடைகூட்டி இருநாழிநீர்விட்டு பாதியாகக்காச்சிகுடித்துவர சருவசுரமும் தீரும்.

இதுவுமது.

பலசுரக்கியாழம்.

கொன்றைப்பிசின், சுக்கு, சிறுகாஞ்சொரிவேர், ஆடாதோடையீர்க்கு, பேய்ப்புடல், கொத்தமல்லிவிரை, கோரைக்கிழங்கு இவைகளையிருநாழிநீர்விட்டு நாலுக்கொன்றாய் கியாழம்வடித்து இருவேளையாகக்குடிக்கவும் இப்படி சு-ரு, நாள் குடிக்க சருவசுரமும் தீரும்.

வாதசுரக் கியாழம்.

நல்லசந்தணம் கோரைக்கிழங்கு
சுக்கு சிறுகாஞ்சொரி

இதுகள் சமன்கொண்டு கியாழம்வைத்து ரு-சு, வேளை யருந்த வாதசுரம் வாதத்தாலெடுத்த நோக்காடுதீரும்.

இதுவுமது.

வாதசுரக் கியாழம்.

ஆமணக்கம்வேர் செருப்படை
கூத்தன்குதம்பைவேர் சுக்கு
தழுதாழைவேர்

இவை சமன்கூட்டி அஷ்டபாகமாகக் கியாழம் வைத்து (சு-எ-அ) வேளையருந்த வாதசுரம் தீரும்.

இதுவுமது.

வாதசுரக் கியாழம்.

அத்திவேர் கடுக்காய்தோல்
இலந்தைவேர் சுக்கு
கண்டங்கத்திரிவேர்

இவை சமன்கூட்டி அஷ்டபாகமாகக் கியாழம் வைத்து (சு-எ-அ) வேளை கொடுக்க வாதசுரம் தீரும்.

இதுவுமது.

வாதசுரக் கியாழம்.

தழுதாழைவேர் மஞ்சள் சுக்கு தாணிக்காய்யிவைசமன் கூட்டி அஷ்டபாகமாகக் கியாழம் வைத்து (சு - அ) வேளை கொடுக்க வாதசுரம் நிதானப்படும்.

பயித்தியசுரக்கியாழம்.

நரிபயிற்றம்வேர் சித்தாமல்லிவேர்
கோரைக்கிழங்கு பேராமல்லிவேர்
வெட்டிவேர் சீரகம்

இவைசமன்கூட்டி அஷ்டபாகமாகக் கியாழம் வைத்து மாறுகிறவரையில் (எ-அ) நாள் இருவேளையுங்கொடுக்கவும்.

இதுவுமது.

பயித்தியசுரக்கியாழம்.

சீந்திற்கொடி	கோஷ்டம்
விலாமிச்சம்வேர்	நல்லசந்தணம்
கோரைக்கிழங்கு	சிறுகுரிஞ்சிவேர்

இவை சமன்கொண்டு அஷ்டபாகமாகக் கியாழம் வடித்து (ய) நாள் யிருவேளையும் கொடுக்கவும்.

இதுவுமது.

பயித்தியசுரக்கியாழம்.

சிறுதுமட்டிவேர்	ஜடாமஞ்சி
நரிபயிற்றம்வேர்	கோரைக்கிழங்கு
சீந்திற்கொடி	பேராமல்லிவேர்
சுக்கு	அதிமதுரம்

இவை சமன்கொண்டு அஷ்டபாகமாகக் கியாழம் வடித்து (ரு-சு) வேளைகொடுக்கவும் தீரும்.

சிலேத்துமசுரக்கியாழம்.

கண்டங்கத்திரிவேர்	செம்முள்ளிவேர்
முக்காவேளைவேர்	சுக்கு
ஆடாதோடையீர்க்கு	மிளகு

இதுகள் சமன்கொண்டிடித்து அஷ்டபாகமாகக் கியாழம் யிருவேளை (ங-ச) நாள்கொள்ள சவுக்கியமாகும்.

இதுவுமது.

சிலேத்துமசுரக்கியாழம்.

ஆடாதோடையீர்க்கு	வசம்பு
செம்முள்ளிவேர்	கண்டங்கத்திரி
பிரண்டை	கடுகுரோகணி

இதுகள் சமன்கொண்டு அஷ்டபாகமாகக் கியாழமாக்கி (ச-ரு) நாள் யிருவேளையும் கொடுக்கவும்.

கியாழவகை பரணி

முற்றுப் பெற்றது.

உ

தேவிசகாயம்.

ஒன்பதாவது
கண்டாவிழ்தவ்லைகுபரணி

பஞ்சபாக்கியச் சூரணம்.

மாங்கொட்டைபருப்பு, கருவேப்பிலை, சுண்டக்காய் வற்றல், வெந்தயம், ஓமம் இவ்வைந்தும் சமஎடைபெடுத்து வறுத்து சூரணம் செய்து மூவிரல் பிரமாணம் தயிரில் கொள்ளவும் தீரும்வியாதிகள் சகலகிராணி, அதிசாரம், வயிற்றிரைச்சல், கழிச்சல் சீதம் இரத்தம் விழுதல் மூலக்கடுப்பு வயிற்றுக்கடுப்பு முதலியவை நீங்கும்.

மூலவாய்வுக்கு.

வெள்ளுள்ளிபலம் (ரு) உ-படி ஆவின்பாலில் அரைத்து கலக்கிக்காச்சி புறைகுத்தி கடைந்து தயிரெடுத்து அந்தத்தயிரை அந்திசந்திமூன்றுநாள் அன்னத்திலிட்டு சாப்பிடவும்.

சகலகிராணிகளுக்கு.

திப்பிலி, சுக்கு, மிளகு, சாதிக்காய், கிராம்பு, இந்துப்பு, ஏலம், சீரகம், பெருங்காயம், வேலன்பிசின், மாம்பிசின், இலவம்பிசின், முத்தக்காசு, புளியம்விரைதோல், மாதுளந்தோல், அபின், வகைக்கு விராகனிடை ஒன்று வீதம்பெடுத்துபொடித்து யிதற்கு சமஎடை சுத்திசெய்த கஞ்சாதூள் கலந்து வேளை ஒன்றுக்கு ஒருவிராகனிடைவீதம் தேனிற்கலந்துகொள்ளவும்

மூலமுளை மூலக்கடுப்புக்கு.

மருதம்பட்டை கால்பலம் யெடுத்து கால்படி ஆவின்பாலில் அரைத்து கலக்கி மூன்றுநாள் கொடுக்கவும்.

மூலமுளைக்கு.

வேப்பமுத்தின் பருப்பு ஒருஎளுமிச்சங்காய்பிரமாணம் அரைத்து சற்றே வெதுப்பி பில்லை தட்டி மூன்றுநாள் கட்ட புழுவிழும் முளைகரையும்.

சீழ்மூலத்துக்கு.

காரெள்ளு, கடுகு, திப்பிலி, சுக்குவகைக்குப்பலம்ஒன்று இவைகளை வெதுப்பி சூரணித்து திருகடிபிரமாணம்வெந்நீரில் காலைமாலை (௫) நாள் கொள்ளவும்.

கண்ணில் சதை வளர்த்திக்கு.

ஈருள்ளியும் குரிஞ்சாவும் ஓர்நிரையாய்யிடித்து-௩, நாள் கண்ணில் பிழியவும்.

வசூரியில் தாக மெடுத்தல்.

கலைமான்கொம்பை ஊரவைத்து கழுவிப்போட்டு அதை ராவிய தூள்பலம் (௨) யெடுத்து சுடுதண்ணீரில்போட்டு ஊரவைத்துக் கொடுக்கவும்.

வசூரிஞல் நேத்திரத்தில் வலி கண்டால்.

சீரகத்தை துணியில் பொட்டளங்கட்டி முலைப்பாலில் ஊரவைத்து கண்ணில் ஒத்தடமிடவும் (௨) சுடுசோற்றில்வெண்ணெய் சேர்த்து மத்தித்து துணியில் பொட்டளங் கட்டி நீராகாரத்தண்ணீரில் தோய்த்து ஒத்தடமிடவும்.

கண்ணில் வசூரிவராதிருக்க.

வசூரி காய்ச்சலடிக்கும்போது ஈருள்ளியை வாயிற்போட்டு மென்று காச்சலடித்தவன் கண்ணில் ஊத்தவும்.

வசூரியிஞல் நேரிடும் சூலைகட்டு.

ஒருபழங்கூரை வைக்கோலும், ஒருபிடி வேப்பிலையும், சேர்த்துவித்து (௩) நாள் வரை வேதுவிட்டு ஒத்தடம்போட்டுக் கட்டவும் (௨) வட்டத்திருத்தியை சமூலம் வேகவைத்து (௰௩) நாள் வேதுவிட்டு ஒத்தடம்போட்டுக் கட்டவும்.

ஆராத வசூரி புண்ணுக்கு.

முற்றின தேங்காயை திருகி அதில் புளியம் விரையின் மேற்றோலைப் பொடித்துப்போட்டு பிசைந்து பிழிய தயிலம் வரும் அதை புண்ணிற்போடவும்.

வயற்று கிருமிவிழ.

எலிச்செவியும் முருங்கவேரும் திரிபலையும் நருக்கிக்கியாழம்செய்து சங்களவு கொடுக்கவும்.

குழந்தைகளின் ஊதுமாந்தம் பொருமல் வாதத்துக்கு.

இரசம், சுக்கு, வெண்காரம், கெந்தகம், வகைக்கு விராகநிடை ஒன்று நேர்வாளம் விராகநிடை (௪) இவைகளை சுத்திசெய்து குளிர்ந்தநீர் விட்டரைத்து பாசிபயற்றளவு உண்டைசெய்து ஒரு உண்டைதண்ணீரில் கரைத்துக்கொடுக்கவும்.

குழந்தைகள் சாம்பல் மண் தின்றதற்கு.

கிழ்க்காய் நெல்லிவேர் விராகநிடை ஒன்றுகடுக்காதோல் விராகனிடை இரண்டு மிளகு விராகனிடை மூன்று புளித்தமோரிலரைத்து கலக்கி சங்களவு மூன்றுநாள் கொடுக்கவும்.

வெட்டுகாயத்துக்கு.

வெட்டுப்பட்ட புண்ணில் சுயஎள்ளெண்ணெயை விட்டு துணிசுற்றி ஒரேகட்டு கட்டிவிடவும் ஜெலம்படாமல் பார்த்துவரவும்.

வங்குகருஞ்சிட்டைக்கு.

இலந்தைக்கொட்டை, திப்பிலி வகைக்கு விராகனிடை (௨) மஞ்சள் விராகனிடை (௪) வேண்டியமட்டும் தேன்விட்டரைத்து வங்குவந்தவிடத்தில் தடவிவரவும்.

மார்புச்சளி கோழைகட்கு.

பிரண்டையைவெதுப்பிச் சாறுபிழிந்து ஐந்துநாள் சங்களவு இருபொழுதும் கொடுக்கவும்.

கண்ணோய்க்கு.

கற்கண்டைப் பொடித்து துணியில்முடிந்து புளிப்புமாதளஞ்சாற்றில் ஊரவைத்து கண்ணிற்பிழியவும்.

குழந்தைகளுக்கு உரம்விழுதல்.

வெள்ளைப்பூண்டு, கடுகு, வகைக்கு பலம்-௨, அரைப்படி நல்லெண்ணெயிற்போட்டுக் காச்சிவடித்து குழந்தைமேற்பூசி

நொச்சியிலை, வேப்பிலை, மாவிலை, மூக்கிரட்டை இவைகளைப் போட்டுக்காச்சி வென்னீரில் ஸ்நானம்செய்விக்கவும்.

பாம்புகடித்தால்.

கடிவாய்வுக்கு (உஉ) அங்குலத்துக்குமேல் பலமானமெல்லிய கயிற்றைப்போட்டு இருக்கிகட்டவும், அதற்குமே லிரண்டுகட்டு தனித்தனிகட்டவும், கடிவாயில்கத்தியால் ஆழமாய்கீரி இரத்தம் வடியச்செய்யவும், அப்பால்அந்த காயத்தில் (கார்பாலிக்ஆசிட்) சு-ரு- துளிவிடவும்.

தேள், நட்டுவக்காலி, தேனீ, குளவி முதலியவை கொட்டியதற்கு.

பொருக்கக்கூடிய சூடுள்ள வென்னீரை வார்த்து அதில் சோங்கை உப்புபோட்டு அந்தவென்னீரை அகல பாத்திரத்தில்வைத்து அதற்குள் ஷெ விஷசெந்துக்கள் கொட்டிய பக்கத்தை சற்றுநேரம் வைத்திருக்கவும் அப்பால் சுயம்பு யெள்ளெண்ணெய் தடவவும்.

குழந்தைகள் கக்கிருமலுக்கு.

குழந்தையின் வயதெத்தனையோ அத்தனை கிரேயினஸ் குயினைவை ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கரைத்து ஒருமணி நேரத்துக்கொருதரம் ஒருதேக் கரண்டிவீதம் கொடுக்கவும்.

வேக்குருக்கு.

1, ஒருசீசா சுத்தஜலத்தில், 4-ரூபா எடை வெண்காரத்தைகரைத்து உடம்பில் பூசிவரவும், 2 - சந்தனத்தை பன்னீரில் அரைத்து கலக்கி சற்றுநேரம் வைத்திருந்து சல்லாவில் வடித்து அதில் ஒரு அவுன்சுக்கு 10-கிரேயின் வீதம், மயில் துத்தத்தை கரைத்து வேக்குருஇருக்குமிடத்தில் சொற்பஞ் சொற்பமாய் பூசிவரவும்.

அரணை விரியன் பாம்புகடிக்கு.

குத்தாயிலை அரைத்து பசுவின் பாலில் கலக்கி சாப்பிடவும்.

சுருட்டைகடிக்கு.

கண்டவேரை அறைத்து இளவென்னீரில் சாப்பிடவும்.

தந்தரோகத்திற்கு.

செங்கொட்டை பலம்-ம, கரியுப்பு பலம்-ரு; இவை யிரண்டையும் செப்புபாத்திரத்தில் வைத்து புடமிட்டு பல்விளக்கவும்.

காதில்சீழ்வடிதற்கு.

சத்திசாரணை கிழங்கு கிளாவேர் நெல்லிவேர் கையாந்தகரை சிகப்புநெருஞ்சில் சமன்தட்டி வேப்பயெண்ணெயில் போட்டுக்காச்சி காதில் விடவும்.

பாஷாணம்தின்றவர்களுக்கு.

மிளகை அரைத்து எருமைவெண்ணெயில்மத்தித்துஉள்ளுக்குக் கொடுத்து எருமை தயிரில் சந்தணம்அரைத்து உடம்பிற்பூசவும்.

அரையாப்புக்கு.

முடக்கற்றனிலை, சுண்ணாம்பு, வெல்லம், எலுமிச்சம்பழச்சாறுவிட்டு அறைத்துப்பூசவும்.

எச்சிற்றழும்புக்கு.

எருக்கம்வேர்பட்டை தகரவிரை பெலுமிச்சம் பழச்சாறுவிட்டு அறைத்துபூசவும்.

இனி அனேகவிதமான முறைகளை ஐந்தாங் காண்டத்தில் வெளியிடப்படும்.

நான்காங்காண்டம்

முற்றிற்று.